The Journal of The Tanjore Maharaja Serfoji's Sarasvati Mahal Library

CHATRAPATHI MAHARAJ SERFOJI'S
196th BIRTHDAY
COMMEMORATION VOLUME

EDITED BY

Vidwan A. VADIVELAN,
Honorary Secretary,
T. M. S. S. M. Library, Thanjavur.

Vol. XXVI Nos. 2 & 3

PUBLISHED ON BEHALF OF
THE ADMINISTRATIVE COMMITTEE OF THE LIBRARY

A. D. 1974 Saka 1896

Annual Subscription Rs. 4.

Tanjore Maharaja Serfoji's Sarasvati Mahal Library

ADMINISTRATIVE COMMITTEE

Thiru C. RAMDAS, I. A. S.,
District Collector & President,
T. M. S. S. M. Library Committee,
Thanjavur.

Thiru T. N. SINGARAVELU, B. A., B. L.,
District Judge & Member,
T. M. S. S. M. Library Committee,
Thanjavur.

Thiru Ry. THULAJENDRA RAJA SAHEB,
Prince & Life Member,
T. M. S. S. M. Library Committee,
Thanjavur.

Thiru R. JAYARAMAN, B. A., B. L.,
Advocate & Member,
T. M. S. S. M. Library Committee,
Thanjavur.

Vidwan Thiru A. VADIVELAN,
Member & Honorary Secretary,
T. M. S. S. M. Library Committee, Thanjavur.

★

Form IV

(See Rule 8)

1. Place of Publication:	Thanjavur.
2. Periodicity of its Publication:	Three issues a year.
3. Printer's Name:	The Sri Vani Vilas Syndicate Ltd., Srirangam.
Nationality:	Indian.
Address:	Srirangam, Tiruchirapalli-6.
4. Publisher's Name:	Honorary Secretary, Thanjavur Maharaja Serfoji's Sarasvati Mahal Library, Thanjavur.
Nationality:	Indian.
Address:	Thanjavur Maharaja Serfoji's Sarasvati Mahal Library, Sarasvati Mahal, Thanjavur.
5. Editor's Name:	Vidwan A. Vadivelan,
Nationality:	Indian.
Address:	Honorary Secretary, Sarasvati Mahal Library, Thanjavur.
6. Names and Addresses of individual who own the newspaper and partners or shareholders holding more than one per cent of the total capital:	Administrative Committee, Thanjavur Maharaja Serfoji's Sarasvati Mahal Library, Thanjavur.

I, A. Vadivelan, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

A. VADIVELAN,
Honorary Secretary.
(Signature of Publisher)

Date: 15—10—74.

CONTENTS

		Pages
1. Editorial	...	i—ii
2. Serfoji Day (24—9—1973)	...	i—ii
3. ஞானக் குறவஞ்சி	...	i—viii
Title Page & Intro. Text (Completed)	...	17—35
— V. Chockalingam, Vidvan, Tamil Pandit, Sarasvati Mahal Library.		
4. பத்தியமும் அபத்தியமும் (இரண்டாம் பாகம்)	...	i—viii
Title Page & Intro. Text (Completed)	...	21—34
— C. Rajarajesvara Sarma, Āyurveda Śiromaṇi, Junior Research Officer, L. R. U., Sarasvati Mahal Library.		
5. குருக்ஷேத்திர மாலை	...	1—20
— M. Seeralan, B. A., Assistant Librarian, Sarasvati Mahal Library.		
6. சிவகாமி அம்மை பேரில் அகவல்	...	1—10
— R. Thilagam, Pulavar, Tamil Pandit, Sarasvati Mahal Library.		
7. धातुकोशः	...	17—34
— P. M. Padmanabha Sarma, Śiromaṇi, Sanskrit Pandit, Sarasvati Mahal Library.		
8. युद्धकाण्डचम्पूः	...	1—8
— P. M. Padmanabha Sarma.		
9. लक्षणराजिः	...	1—20
— K. E. Govindan, Śiromaṇi, Vidyā Vāridhiḥ, Sikṣā Śastri, Sanskrit Pandit, Sarasvati Mahal Library.		

10. साळग्राममूर्तिलक्षणम् ... 5—16
— N. K. Rāmanuja Thathachariar, Śiromaṇi,
Sanskrit Pandit, Sarasvati Mahal Library.

11. प्रासादषट्श्लोकीं ... 1—12
— N. V. Venkatasubramania Sastri, Śiromaṇi,
Sanskrit Pandit, Sarasvati Mahal Library.

12. पूर्वमीमांसागुच्छः
कपिञ्जलाधिकरणाक्षेपः ... 1—3

संख्यामुष्ट्यधिकरणाक्षेपसंक्षेपः ... 4—6
— N. S. Devanathachariar, Śiromaṇi,
Retd. Sanskrit Pandit, Sarasvati Mahal Library.

13. रामजनन निरुपण ... 9—30
— T. R. Bhima Rao, Marathi Pandit,
Sarasvati Mahal Library.

14. From Our Visitor's Book ... i—vi

The Journal of
The Tanjore Maharaja Serfoji's Sarasvati Mahal Library

Vol. XXVI A. D 1974 Saka 1896 Nos. 2 & 3

EDITORIAL

We proudly present this issue, wherein we have provided the usual Literary treat in Tamil, Sanskrit and Marathi.

In our Tamil Section the serial article *Jnanak-kuravanji* concludes with this issue. This unique and rare work adopts the simple style of dialogue, explains the path leading to Jnana. The other one *Pathyapathyam Part II* also concludes with this issue. It is a medical guide book on the healthy and un-healthy qualities of the various articles of food. It is a very valuable work on dietetics. The new serial *Kurukshetra Malai* describes a puranic story about the fight between Lord Krishna and Arjuna in lyrical song. At the end of this event Arjuna receives the blessing of Lord Krishna. *Sivakami-ammai Agaval* a devotional hymn addressed to the Goddess Sivakami also high-lights the Tamil Section.

In the Sanskrit Section the serial article *Dhatukosa,* the synonymous Sanskrit roots collected together, concludes with this issue. The other work named *Yuddhakanda* in Campuramayana by the same author Ghanasyama Pandita, the famous Maharashtra writer of Tanjore who lived in the court of King Tulaja (18th Century) starts in this issue as a new serial. The continued serial *Sala-grama murti-lakshanam* describes the different varieties of Salagrama and its inherent divinity.

Lakshanarajih is a Nyaya work which examines the nature of definition and then proceeds to determine the definition of the catagories and substances starts in this issue. A small tantric work found in our later collection presented by Ayurvedacharya Dr. V. B. Nataraja Sastri of Tennur entitled *Prasada Shatsloki* with its commentary

has been published. The two articles *Kapinjaladhikaranakshepa* and *Sankhyamustyadhikaranaksepasanksepa* on Purvamimamsa section will engage the interest of those who have a ritualistic inclination.

In the Marathi Section the Marathi work *Ramajananani-rupan* by Govindakavi about the story leading to Rama's birth concludes with this number.

The activities of the T. M, S. S. M. Library during the period covered by this issue of the Journal was the celebration of the birth-day of Rajah Serfoji the enlightened and erudite oriental prince whose generosity and munificence kept before our mind's eye by the unique, Temple of Learning the Sarasvati Mahal. It is our fervent desire that the birth-day of Rajah Serfoji should be celebrated on a grander and more extensive scale in the Library in successive years and also everywhere in an All India basis. It is our fond hope that appropriate steps should be taken for issue of a postage stamp with the statue of the Maharaja Serfoji of Thanjavur whose name deserves to be remembered for all time to come as a homage to the great King who has left behind as a legacy for all mankind his everlasting dominion, the Sarasvati Mahal. In the words of Dr. A. C. Burnell "The Sarasvati Mahal Library, is a largest and the most important in the world and is unrivalled."

This issue comes to a close with the usual extracts from our Visitor's book which will present to the readers a periodical picture of Sarasvati Mahal as the numerous Visitors see it. Due to the abnormal rise of the cost of paper and printing, we have issued this number as a combined issue. We hope the indulgent readers will bear with the un-avoidable delay of its publication due to reasons beyond our control.

Thanjavur
1—11—1974

EDITOR

ŚERFOJI DAY

(24—9—1973)

The 196th Birth Day of Rajah Serfoji II was celebrated in the premises of the T. M. S. S. M. Library on 24—9—1973 by the staff of the Library and the Literary Research Unit. It was a day of joyous thanks-giving to the founders and promoters of the Saraswati Mahāl. The celebrations commenced at 4-30 P. M. with the garlanding of the big marble statue erected during his life-time, of Rajah Serfoji, standing majestically in the Hall facing the Library. It was followed by a Group Photo of the Library staff and distinguished guests.

The profusely garlanded large oil-painting of Mahārāja Serfoji having a beautiful and tastefully adorned canopy above and occupying the centre of the gracefully decorated Library Hall with appropriate royal paraphernalia presented the realistic picture of the Mahārājah seated on the throne. After distribution of sweets followed by a Tea-Party, the function began with the prayer-song sung by Kumāri C. V. Lakshmi appropriately dedicated to Saraswatī. Thiru C. M. Kuppannan, B. Sc., B. L., the District Judge of Thanjavur presided. The Honorary Secretary Vidvan Thiru A. Vadivelan in a brief Tamil speech fit for the occasion welcomed the guests and paid a tribute to Rājah Serfoji whose blessed name the Library bears. The same sentiments were echoed in a short speech in English delivered by Thiru R. Jayaraman, B. A., B. L., nominated member of the Administrative Committee of the Library. The President in his address recalled the lasting services of Rājah Serfoji immortalized through the Saraswatī Mahāl and referred to the Rājah's great qualities of head and heart. Śri Thulajendra Rājah Saheb, Junior Prince and Life Member of the Library Administrative Committee paid grateful homage to his ancestor Rājah Serfoji and expressed his gratitude to all those interested in the welfare of the instituitions established by him. Glowing tributes to the royal scholar who was an ardent lover and promoter of arts, languages and literature, were paid in speeches and laudatory verses in Sanskrit (by Śiromani N. K. Ramanuja Tatacharya and Śiromani N. V. Venkaṭasubramania Sastri); in Tamil (by Vidvan V. Chockalingam); in Telugu (by Pandit N. Viswanaṭhan) and in Marathi (by Pandit T. R. Bhima Rao); Selvi R. Thilagam Pulavar (Tamil Pandit) along with Kumari M. Visalakshi Śiromani (Research Scholar in Sanskrit) sang some verses in Tamil. Modi Pandit Śrī R. Devaji Rao referred to the historical importance of some Modi manuscripts preserved in the Library.

Dr. C. S. Venkateswaran, M. A., Ph. D, the Curator paid a grateful tribute to Rājah Serfoji the royal patron of letters, the master of many languages both European and Indian and a great integrator and harmonizer who had a liberal and catholic mind which welcomed all noble and salutary ideas. He thanked the Princes of the Royal Family for their continued interest in the welfare of the useful Institutions established by Rājah Serfoji. Finally he expressed his thanks to the Members of the Library Staff for their enthusiastic co-operation in successfully conducting the celebrations under the able guidance of the cultured Honorary Secretary.

ஞானக் குறவஞ்சி

பதிப்பாசிரியர் :

தஞ்சை சரசுவதி மகால் நூல்நிலையத் தமிழ்ப் பண்டிதர்,

வித்துவான் திரு வி. சொக்கலிங்கம்.

★

தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலைய நிருவாகக் குழுவுக்காகக்

கௌரவக் காரியதரிசி

வித்துவான் திரு. அ. வடிவேலன் அவர்களால்

வெளியிடப்பட்டது.

★

ஸ்ரீ வாணி விலாச அச்சகம்

திருவரங்கம்

கி. பி. 1974] [விலை ரூ. 1-50

தமிழ் வாழ்க

முன்னுரை

கல்லாலின் புடையமர்ந்து நான்மறையா
(ஆ)றங்கமுதற் கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த
பூரணமாய் மறைக்கப் பாலாய்
எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை
இருந்தபடி இருந்து காட்டிச்
சொல்லாமற் சொன்னவரை நினையாமல்
நினைந்துபவத் தொடக்கை வெல்வாம்.

என்பது திருவிளையாடற் புராணம். ஞானமே வடிவான கடவுள் கல்லால மரத்தின் கீழிருந்து சனகாதி நால்வருக்கும், நான்கு மறை, ஆறு அங்கங்கள் முதலான எல்லாவற்றையும், திருவாய்மலர்ந்தருளுதலின்றித் தன் திருக்கர மாத்திரச் சின்முத்திரை என்னும் அடையாளங்காட்டியே உணர்த்த, அது கொண்டு அவர்களும் அனைத்தும் உணர்ந்தனர்.

அவ்வாறு பெறுவோர் தலைசிறந்த மாணாக்கராவர். தலை, இடை, கடைமாணாக்கர் என்பதுபோல மக்களும், கொளுத்தப் பற்றும் கற்பூர அறிவுடையார் என்றும், சற்று முயன்று பற்றவைக்கப் பற்றும் கரி அறிவுடையார் என்றும், எவ்வளவு முயன்றும் பற்றாத கதலி (வாழைத்தண்டு) அறிவுடையார் என்றும் முத்தரத்தினராவர். எத்தரத்தினருக்கும் பயன் தருமாறு எழுந்ததே இந்த 'ஞானக் குறவஞ்சி.'

குறவஞ்சி நடையில் ஞானத்தினை எளிமையாகக் கூறுவது 'ஞானக் குறவஞ்சி' யாகும். இது எமது மகால் சுவடி எண் 821-ஐக் கொண்டது. மூன்று பகுதிகளை உடையது. ஆசிரியர் பெயர் தெளிவாகக் கிடைக்கப் பெறவில்லை என்றாலும், முதலிரண்டு பகுதிகளை இயற்றியவர் 'குமரகுருபரன்' என்று ஒருவாறு தெரிகின்றது. மூன்றாம் பகுதி 'பீருமுகம்மது' என்பவராற் செய்யப்பட்டது. எளிய நடையில் உள்ள இது ஒரு பெருந் தத்துவநூல். நல்ல பயனைத் தருவது.

'குறவஞ்சி' என்பது 'குறத்திப் பாட்டு' அல்லது 'குறம்' எனப் பெயர்பெறும். 'குளுவ நாடகம்' என்பதும் இவ்வகையினைச் சார்ந்ததே. இது தொண்ணூற்றாறுவகைப் பிரபந்தங்களுள் ஒன்று. பெரும்பான்மை நாடக வடிவில் அமையப்பெற்றது. கடவுளையோ, அரசரையோ, வள்ளலையோ, செல்வரையோ, பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்படுவது,

தலைவன் உலாவருதல், தலைவி காமுறுதல், காமநோய்கொடு வாடுதல், தூதுவிடுத்தல், குறத்தி வருதல், குறி பகர்தல், குறவன் வருதல், குறவன் குறத்தி வாதிடுதல், முதலானவைகள் அமையப் பாடுவதாகும்.

இந்த 'ஞானக் குறவஞ்சி'யில் மேற்கூறிய தலைவன் உலாவரல் முதலானவைகள் இன்றிக் குறவன் வருகை, குறவன் தன் பெருமை கூறுதல், திருமலைச் சிறப்புக் கூறுதல், குறத்தி வருகை, குறவன் குறத்தி வாதிடுதல், குறவன் பறவை வரவு கூறுதல், அமைதி வேண்டல், மெஞ்ஞானப்புள் போகாதிருத்தல், கண்ணி கொண்டுவருதல், கண்ணிகளைத் திருத்திவைத்தல், குறவன் ஞானப்புள்ளைப் பிடித்தல், வாழ்த்து ஆகிய தலைப்புகளுடன் முதற்பகுதி முடிவுறுகின்றது.

இரண்டாம் பகுதியில் குறவன் தோற்றம், குறவன் தன் சொந்தமலை கூறுதல், சிவபட்சி வருவதைக் கூறுதல், அமைதி வேண்டல், சிவபட்சிகளைச் சுற்றி வளைத்தல், அவைகள் போகாமற் காத்தல், அவைகள் இரை மேய்தல், கண்ணி கொண்டுவருதல், சிவபட்சிகளைப் பிடித்தல், வாழ்த்து ஆகிய உறுப்புகள் கூறப்பட்டுள்ளன.

மூன்ரும் பகுதியில் சிங்கன் சிங்கி தருக்கம் என்னும் உரையாடல் போன்ற வினவிடை கொண்டு வாதிடுதல் மட்டுமே கூறப்பட்டுள்ளது.

முதற்பகுதியில் ஞானத்தினைப் பற்றுதல் போலவும், இரண்டாம் பகுதியில் சிவத்தினைப் பற்றுதல் போலவும், மூன்ரும் பகுதியில் வினவிடை வாயிலாகத் தத்துவங்களைப் பற்றுதல் போலவும் கூறப்பட்டுள்ளன.

மருத்துவத்தினை மனதில் பதியவைத்தற்பொருட்டு எளிய நடையில் வைத்தியக்கும்மி, வைத்தியக் குறவஞ்சி முதலான நூல்கள் எழுந்தனபோல, ஞானம் பெற ஞானக்கும்மி, ஞானக் குறவஞ்சி, மெஞ்ஞானக் குறவஞ்சி, ஞான ரெத்தினக் குறவஞ்சி, தத்துவக் குறவஞ்சி, வேதாந்தக் குறம் முதலான பல நூல்கள் எழுந்தன. எளிய நடையேயாயினும் தத்துவக் கருத்துக்களை உள்ளடக்கிக் கூறியுள்ள விடங்களில் உருவகம் தந்து கூறியுள்ளார்.

'திருமலைச் சிறப்பு'க் கூறும் தலைப்பில் 'கந்தன்எங்கோன் திருமலை மகிமை சொல்வேன்' என்கிருர் முதற்றெகுதியில். 'திருமலை' என்பது திருப்பதி (வேங்கடமலை)யினைக் குறிக்கும் என்பது உணரற்பாற்று. தற்போது 'திருமலை திருப்பதி' என வழங்கப்படுகின்றது வடவேங்கடம், வடவேங்கடமுடையானைக் கந்தக்கடவுள் என்பர் ஒரு சாரார்,

இனிக் குறவஞ்சி வரிசையில் பல குறவஞ்சிகள் உள்ளன. அவற்றுள் சில.

எண்	குறவஞ்சியின் பெயர்	ஆசிரியர் பெயர்
	அ	
1.	அமர விடங்கன் குறவஞ்சி	?
2.	அர்த்தநாரீசர் குறவஞ்சி	?
3.	அலகுமலைக் குறவஞ்சி	?
4.	அழகர் குறவஞ்சி	கவிகுஞ்சர பாரதியார்
5.	அனலைத்தீவுக் குறவஞ்சி	முத்துக்குமாரப் புலவர்
	ஆ	
6.	ஆதிமூலேசர் குறவஞ்சி	தில்லைவிடங்கன் மாரிமுத்தாபிள்ளை
	இ	
7.	இராசமோகனக் குறவஞ்சி	கிரிராச கவி
8.	இராமபத்திர மூப்பனார்குறவஞ்சி	க. சுப்பராமய்யர்
	க	
9.	கச்சாய்க் குறவஞ்சி	மாப்பாண முதலியார்
10.	கச்சேரி முதலியார் குறவஞ்சி	இன்பக்கவி
11.	கண்ணப்பர் குறவஞ்சி	?
12.	கதிரைமலைக் குறவஞ்சி	விநாயகப் புலவர் (சுதுமலை)
13.	கபாலீச்சுரர் குறவஞ்சி	?
	கா	
14.	காங்கேயன் குறவஞ்சி	?
15.	காயாரோகணக் குறவஞ்சி	அழகுமுத்துப் புலவர்
16.	காரைக் குறவஞ்சி	மே. சுப்பையர்
	கு	
17.	குமாரலிங்கக் குறவஞ்சி	?
18.	கும்பேசர் குறவஞ்சி	பாவநாசமுதலியார்
19.	குறவஞ்சி (தெலுங்கில்)	?
20.	குன்றுக்குடிக் குறவஞ்சி	வீரபத்திரக் கவிராயர்

எண்	குறவஞ்சியின் பெயர்	ஆசிரியர் பெயர்
	கொ	
21.	கொங்கர் குறவஞ்சி	சா. தூ. சு. சோசி
22.	கொடுமளூர்க் குறவஞ்சி	முதுகுளத்தூர் நல்ல வீரப்பப் பிள்ளை
23.	கொடுமுடிக் குறவஞ்சி	?
	கோ	
24.	கோமாசிக் குறவஞ்சி	?
	ச	
25.	சகசிராசன் குறவஞ்சி	முத்துக்கவி
26.	சந்திரசேகரக் குறவஞ்சி	?
27.	சரபேந்திரபூபால குறவஞ்சி	கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர்
	சா	
28.	சாப்டூர் குறவஞ்சி	நகரம் முத்துசாமிக் கவிராயர்
	சி	
29.	சிதம்பரக் குறவஞ்சி	செல்லப்பப் பிள்ளை
30.	சிதம்பரக் குறவஞ்சி	?
31.	சிவபெருமான் குறவஞ்சி	தாமோதரக் கவிராயர்
32.	சிவன்மலைக் குறவஞ்சி	தே. இலட்சுமண பாரதியார்
33.	சிற்றம்பலக் குறவஞ்சி	கே. என். தண்டபாணிப் பிள்ளை
	சு	
34.	சுவாமிமலை முருகன் குறவஞ்சி	இலிங்கப்பையர்
	செ	
35.	செந்தில் குறவஞ்சி	?
	சே	
36.	சேற்றூர் முத்துசாமித்துரைக் குறவஞ்சி	இராமசாமிக் கவிராயர்
	சோ	
37.	சோழக் குறவஞ்சி	கம்பர்

எண்	குறவஞ்சியின் பெயர்	ஆசிரியர் பெயர்
	ஞா	
38.	ஞானக் குறவஞ்சி	குமரகுருபரர்
39.	ஞான ரெத்தினக் குறவஞ்சி	பீருமுகம்மது சாகிபு
	டெ	
40.	டெல்லிக் குறவஞ்சி	டெல்லித் தமிழ்ச் சங்கம்
	த	
41.	தஞ்சைக் குறவஞ்சி	சென்னை கேசரி அச்சகம்
42.	தஞ்சை வெள்ளைப்பிள்ளையார் குறவஞ்சி	?
43.	தத்துவக் குறவஞ்சி	முருகேசபண்டிதர்
44.	தமிழரசிக் குறவஞ்சி	புலவரேறு அ. வரதநஞ்சைய பிள்ளை
	தி	
45.	திருக் குற்றாலக் குறவஞ்சி	திரிகூட ராசப்பக் கவிராயர்
46.	திருச்செங்கோட்டுக் குறவஞ்சி	?
47.	திருப்பாகையூர்க் குறவஞ்சி	?
48.	திருப்போரூர்க் குறவஞ்சி	புரசை, அட்டாவதானம் சபாபதி முதலியார்
49.	திருமணக் குறவஞ்சி	ஆ. சுப்பிரமணியக் கவிராயர்
50.	திருமலையாண்டவர் குறவஞ்சி	?
51.	திருவாரூர் தியாகராசர் குறவஞ்சி	முத்துக்கவி
52.	திருவிடைக்கழிக் குறவஞ்சி	மீனாட்சிசுந்தரம்பிள்ளை
	து	
53.	துரோபதைக் குறவஞ்சி	?
	தே	
54.	தேவேந்திரக் குறவஞ்சி	தஞ்சை சரபோஜி மாமன்னர்
	ந	
55.	நகுலமலைக் குறவஞ்சி	சேனாதிராய முதலியார்
56.	,,	விசுவநாத சாத்திரியார்
57.	நல்லைக் குறவஞ்சி	சேனாதிராய முதலியார்
58.	நல்லைநகர்க் குறவஞ்சி	யாழ்ப்பாணம் ப. கந்தப்பிள்ளை

எண்	குறவஞ்சியின் பெயர்	ஆசிரியர் பெயர்
59.	நவபாரதக் குறவஞ்சி	பாலபாரதி சது. சு. யோகியார்
60.	,,	அனைத்திந்திய வானொலி நிலையம்
	நெ	
61.	நெல்லைக் குறவஞ்சி	தொண்டைமான் முத்தையா
	ப	
62.	பழனிக் குறவஞ்சி	வே. முத்தனுச்சாரியார்
	பா	
63.	பாண்டிக் கொடுமுடிக் குறவஞ்சி	?
64.	பாம்பண்ணக் கவுண்டர் குறவஞ்சி	அருணசலக் கவிராயர்
	பி	
65.	பிலிப்பு விராட்ரிக்கோ முத்துக் கிருட்டினன் குறவஞ்சி	இன்பக்கவி
66.	பிரகதீசுவரர் குறவஞ்சி	சிவக்கொழுந்து தேசிகர்
	பெ	
67.	பெத்லெகேம் குறவஞ்சி	தஞ்சை வேதநாயக சாஸ்திரியார்
68.	பெம்பண்ணக் கவுண்டர் குறவஞ்சி	பாலபாரதி முத்துசாமி ஐயர்
	பொ	
69.	பொங்கலூர்க் குறவஞ்சி	பிரமயனப் புலவர்
70.	பொய்யாமொழியீசர் குறவஞ்சி	சிதம்பர தத்துவலிங்கையர்
	ம	
71.	மண்ணிப்படிக்கரை திருநீலகண்டர் குறவஞ்சி	சாமிநாதய்யர்
72.	மருங்காபுரிச் சிற்றரசர் குறவஞ்சி	வெறிமங்கைபாகக் கவிராயர்
73.	மருதப்பக் குறவஞ்சி	பிலிப்பு தெ. மெல்லோ
74.	மல்வில் குறவஞ்சி	வெற்றிவேலுப் புலவர்
	மா	
75.	மாந்தைக் குறவஞ்சி	வீரபத்திரக் கவிராயர்
	மு	
76.	முத்தானந்தர் குறவஞ்சி	ஆற்றூர் முத்தானந்தர்

எண்	குறவஞ்சியின் பெயர்	ஆசிரியர் பெயர்
77.	முத்துசாமித்துரைக் குறவஞ்சி	முகவூர் கந்தசாமிக் கவிராயர்
78.	முருகக் கடவுள் குறவஞ்சி	இலிங்கப்பையர்
79.	முருகர் குறவஞ்சி	நல்லவீரப்பப்பிள்ளை
	மெ	
80.	மெய்ஞ்ஞானக் குறவஞ்சி	முகம்மது
	யா	
81.	யாழ்ப்பாணத்துச் செல்வர் குறவஞ்சி	இன்பக்கவிப் புலவர்
	வ	
82.	வண்ணைக் குறவஞ்சி	விசுவநாத சாத்திரியார்
83.	வண்ணை வைத்தியலிங்கக் குறவஞ்சி	கணபதி ஐயர்
84.	வருணைபுரி ஆதிமூலேசர் குறவஞ்சி	தில்லைவிடங்கன் மாரிமுத்துப்பிள்ளை
85.	வள்ளிக் குறவஞ்சி	?
86.	வள்ளியம்மன் ஆயாலோட்டக் குறவஞ்சி	கந்தசாமி முதலியார்
87.	வன்னிக் குறவஞ்சி	வெற்றிவேலுப் புலவர்
	வா	
88.	வாதசெயக் குறவஞ்சி	?
	வி	
89.	விராலிமலைக் குறவஞ்சி	?
	வெ	
90.	வெங்களப்ப நாயக்கர் குறவஞ்சி	மிதிலைப்பட்டி அழகிய சிற்றம்பலக் கவிராயர்
	வே	
91.	வேங்கடசாமிநாயக்கர் குறவஞ்சி	மாம்பழக் கவிச்சிங்க நாவலர்
	வை	
92.	வைணவக் குறவஞ்சி	முருகேச ராமானுச ஏகாங்கிச் சுவாமிகள்
93.	வைத்தியக் குறவஞ்சி	கொங்கணர்
94.	வையாபுரிக் குறவஞ்சி	?

குறம்

எண்	குறத்தின் பெயர்	ஆசிரியர் பெயர்
95.	அண்டவெளிக் குறம்	?
96.	அம்பலக் குறம்	தொழுவூர் வேலாயுத முதலியார்
97.	இலக்கணயார் குறம்	?
98.	சொர்க்கக் குறம்	பிறையாறு மீரான்கனி அண்ணாவியார்
99.	திருக்குருகூர் மகிழ்மாறன் பவனிக் குறம்	?
100.	நெல்லைநாயகர் குறம்	தொண்டைமான் முத்தையா
101.	பிசுமில் குறம்	பீரு முகம்மது சாகிப்
102.	மதுரை மீனாட்சியம்மை குறம்	குமரகுருபர சுவாமிகள்
103.	மாது குறம்	மீரான்கனியண்ணாவியார்
104.	மின்னொளியாள் குறம்	புகழேந்திப் புலவர்
105.	விதுரர் குறம்	,,
106.	வித்துவான் குறம்	,,
107.	வேதபுரீசர் குறம்	?
108.	வேதாந்தக் குறம்	வெங்கடேச குருதாசர்

மேற்கண்ட குறவஞ்சிகளுள் சிலவற்றில் ஞானமும் தத்துவங்களும் வேதாந்தங்களும் பேசப்படுகின்றன.

இந்நூல் மிகவும் சிதைந்தும் முறிந்தும் காணப்படுகின்றது. 42 ஏடுகளைக் கொண்டது. இதனை ஆய்ந்து வெளியிடப் பரம்பொருளின் திருவருள் துணை செய்தமைக்கு வாழ்த்தி வணங்குகின்றேன். இந்நூலினை வெளியிட அனுமதியளித்த எமது மகால் கௌரவக் காரியதரிசி திருமிகு வித்துவான் அ. வடிவேலன் அவர்கட்கு எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். இந்நூலில் அறியாமையினால் ஏற்பட்ட பிழைகள் இருப்பின் அதனைப் பொறுத்தருள வேண்டுவதோடு, அவைகள் திருத்தம் பெறவும் உதவவேண்டுமெனக் கற்றுவல்ல புலவர்களை வணங்கிக் கேட்டுக் கொள்ளுகின்றேன். இப்பணி இனிது நிறைவெய்தக் கலைமகளின் திருப் பாதங்களைச் சிரமேற்கொள்ளுகின்றேன்.

வாழ்க தமிழ்; வளர்க மெய்ஞ்ஞானம்.

இங்ஙனம்,

தஞ்சாவூர், 14—10—74.

வித்துவான் வீ. சொக்கலிங்கம்,
சரசுவதி மகால் நூலகம்.

காலுரெண் டாகும் நிறமுங் கருப்பு
கலைகள் அறுபத்து நாலுடன் (கூ)டு(ம்)
நாலு சிறகுண்டு பரந்து போக(ா)ம(ல்)
ரகசிய மாக நடுத்தானம் நோக்கித் — திருத்தி

காலன் வழியோடிப் (போகாமல் கண்வாய்)
(கழிந்தவ)ளி பையப் பைய நடத்தியே
மேலாக வேவிந்து நாதாந்தக் குப்பிக்குள்
மீதான மான வெளியொளிக் கேசென்று — திருத்தி

(அகார உகாரஞ்)சே ரினத்திலஞ் செழுத்தாதி
அந்த முதலன் பத்தோ ரெழுத்தாய்ச்
சகாரம் நடுவணை யாய்முக மைந்தாய்
அஞ்செழுத் துஞ்சிவ பாதந் துணையென்று — திருத்தி 31

குறவன் ஞானப்புள்ளைச் சுற்றி வளைத்தல்

கலித்துறை

தீராத வல்வினை தீர்க்குஞ்செந் தூரன் திருச்சரணம்
ஆரா கிலும்புகழ் தேற்றின பேருக் கதிசயங்கேள்
ஓரா யிரங்கெதி யுண்டாமீ ராயிர யோகமுண்டாம்
சேராத செம்பொன்னுஞ் சேருமென் னுளஞ் சிவபதமே! 32

சிந்து

சுத்திவாடையே — கலையாதே — சுத்திவாடையே

சுத்திவா டையேநீ ... ...
தூரத்தி லோடிப் பறந்து போகாமல்
நித்திய மா(ன சிவயோகக்) கண்ணிக்குள்
நேரே வருகுது சீரைப்பார்த் துப்பார்த்துச் — சுத்தி

எங்கும் நிறைந்தபர மானந் தப்பொருள்
(ஏகாட்) சரமாய் (இலங்குந் த)லத்தினில்
அங்கென்று வைத்திடுங் கண்ணிக ளேவேறே
(அசைந்து வருகு) மதிசயம் பார்த்துச் — சுத்தி

தலையுங் கழுத்து முடலு ... ... —
... ... நடுவாசி முன்வைத்து
அலையுங் கடல்போல் மனமும் மதைப்பற்றி
(ய)சையாம லேயுள் ளடங்கு மதைப்பார்த்து — சுத்தி

ஆ(ணுவ) மத்தி(க்கு) மந்தச் சுழிதிறந்
தப்பா லிடைவிட மாகை ய(ம)த்திக்
காணு(ங் கடலினைக்) காமியந் தானென்று
காட்சிய(ா யுன்றன்) க(ண்ணியை வைத்த)ங்கே — சுத்தி

ஓடுங் கலைகளே ரேசக மாகுமுன்
பு(குந்த) கலைகளே பூரக மாகும்
கூடுகின் றதுரை கும்பத்துக் குள்ளே
குலாவிக் (குலாவிக்) குலாவி வருகுது — சுத்தி

இடம்வலம் சுத்தி யாள(வே வ)ந்து
சாதிக (ளா)கி லெழுந்தொனி கேட்குந்
திடமுடன் (நாட்டிய மாடிய) கூறது
சிவயோகக் கண்ணிக்குள் ளேவார தைப்பார்த்து — சுத்தி

மூலா தாரத்தின் மேருவைப் பற்றி
மூண்டெழு கன்னியை (காலா) லெழுப்பி
சால மனமங்கே வைத்துப் பார்க்கில்
சீவ னுகிய சற்குரு பாதத்தைச் — சுத்தி

வெட்டு ... ...த்து
மேனியுந் தன்னிற மாக்கு மதுபோலக்
கட்டுப் படாதசுத்த ... ... ரத்தில்க்
காலங் கழிந்துபோங் காயம் சித்தியாகும் — சுத்தி 33

குறவன் ஞானப்புள்ளைப் பிடித்தல்

கலித்துறை

சிவஞான தேசிகன் செந்தூர் முருகன் (திருச்சரணம்)
(ப)வமேவி யன்புங் கருணையுங் கூர்ந்து [1] தினம்பிடித்தால்
(அவமான) வல்லிருள் நீங்கும் [2] பெரிதும் பரியமுண்டாம்
ந(வலோக) வேதமுந் தன்வச மாகி நடஞ்செய்யுமே! 34

சிந்து

பிடித்துக் கொண்டேனே — மெஞ்ஞானப்புள்
பிடித்துக் கொண்டேனே.

1. தான் பிடித்தால் என்றுளது. 2. பெரிமாம் ஆடி என்றுளது.

பிடித்துக் கொண்டேன் கருத்தி விருத்திப்
பேசாம லேமனங் கூசாம லென்றும்
நடித்தபொற் சரணம் படித்துப் படித்து
வடித்தவர்க் கெட்டாம லாடின கண்ணியைப் — பிடித்து

மாலய னுக்கரி தாகிய வப்பொருள்
நாலுக்கு [1]மாருக் கும்பத்து நடுவாக
ஆலய மாக வமர்ந்தே யிருக்கின்ற
மேலாம் பரம்பொருள் மெஞ்ஞான தீபத்தைப் — பிடித்து

மன்னுமல் மன்னும் எழுத்தையுங் கூட்டி
வாய்க்க வருளை எழுத்தையுஞ் சேர்த்தி
உன்னும லுன்னும் உயிரெழுத் தாக
ஓம்நமோ நாராய ணாநமஸ் தேயென்று — பிடித்து

இருவினை யற்ற விடத்தையுங் காட்டி
என்னைக்கொண் டேயவன் தன்னைத்தந் தாடி.
அருபா ரூப சொரூபா னந்த
மானதன் [2]பிறகே [3]ஆடிஆடி வைத்துப் — பிடித்து

தன்பத் தொன்பத சீர்பத மாகித்
தானவ னுமம் தவழும் அதுவாகித்
துன்ப மலமற்ற இன்பம் விளையும்
(அம்பலத் தேயசைந்) தாடிய பாதத்தைப் — பிடித்து

அரனு மரியு மயனுமந் தப்பெரு
வடியு முடியும் நடுவாயென் னுள்ளத்தில்
திறம்பெற வைத்த அடித்தாள மத்தளம்
துன்ப மலந்தள்ளி இன்பம் ஏற்கவே — பிடித்து

மூன்று விதமாகி முப்பொரு ளும்மாகி
முச்சுட ரும்மாகி மும்முத (லும்மா)கி
நான்றபாம் பின்வாயில் நடுவி லெழுந்த
(நாதாந்தத் துட்பொருள் நாடும்) விஞ்ஞைதப்புள் — பிடித்து

அக்கர வுங்கொன்(றை யம்புலி யுஞ்சூடித்)
(திக்கெனு) மெட்டும் சிறந்தொளி வீசிய
சுக்கிர (தீ)பச் (சுகச்சொரு பானந்த)
(நி)ஷ்க்(கள மா)ய்நெஞ்சி லுக்கிரம தாகவே — பிடித்து

1. மாறுக் எனல் பொருந்தும். 2. பிரவே என்றுளது. 3. ஆரி ஆடிஎன்றுளது.

(எ)ட்டுத் திசையும் பதினறு கோணமும்
முட்டப் படிந்து முளைத்(தெழுஞ் சோதியைப்)
பட்டப் பகலான வெட்ட வெளிதனில்
திட்டப் படுத்தியே (விட்டுப் பிரியாமல்) — பிடித்து

யார்க்குந் தெரியாத அத்து(வி தப்பொருள்)
(ஆதியு மந்தம்) அநாதியு மாய்நின்று
வாக்கு மனதுக்குங் காயத்து(க் கெட்டாமல்)
நரசிங்க யோக ஞானப் புள்ளதைப் — பிடித்து

ஞானமு ஞேயமுஞ் (ஞாதுரு) வுங்கூடி
நாடி யிருந்தது மூடியிருந்தது
ஆனந்த மான [1]அகர்தீத வண்மையை
அரிஓம் நமாவென்ற (அட்சரத் துக்)குள்ளே — பிடித்து

குருவென வந்தார் குணமாய் (நின்ருர்)
(திருநீறு) சாற்றிச் செவியருள் செப்பி
அருள்சிவ மாகியே (தன்னையுங் காட்டி)
(யசை)யாம லேவைத்த வதிசயந் தனையெட்டிப் — பிடித்து

தன்னைத்த(ந் தென்னையுந்) தடுத்தாண்ட சற்குரு
தானென்று நானென்று (பேத)மில் லாமலே
என்னை யறிவித் தெனக்கருள் செய்ய
(இன்)னதென் றுசொல்ல வெல்லைக் கடங்காது — பிடித்து

மன்னும் (மன்றுளே யேறும்) வளியான
வகுத்த குதம்பைப் பகுத்தறி வாகவே
கண்ணி லொளியைக் (கருத்தறி) வாய்வைத்து
காட்சி யாகவந்த (சூட்சுமத் தாலே) — பிடித்து

ஆருறு முப்பத் தாறு கருவியும்
ஐந்து மலமும் (வஸ்துவாய் நிற்கும்)
வீரும் பரம்பொருள் மேலான உச்சி
விளங்கிய தீபம் முழங்க(நின் ருடவே) — பிடித்து

அறுபது மு(ப்)பது [2]ஆரையுந் தாண்டி
ஆரு தார முடிவி லிருந்து
பருபதத் துச்சி நடுவணை பீதினில்
பா(ங்குட னே) வளர்ந் தோங்கிய பேறதைப் — பிடித்து

---

1. — ? 2. ஆறையும் தாண்டி எனல் வேண்டும்.

ஆணுவ மாகிய (மாய்கையைப் போற்றியே)
அந்தப் பதிபசு பாசமும் நீக்கியே
நாணம்பு வில்லும்போ லெனதுள்ளத் தினுள்ளம்
நாடின யெல்லையை தாடியிட் டுக்கொண்டு — பிடித்து

விட்ட எழுத்தை விடாத எழுத்துடன்
மேலாம் வெளியில் விய(மாக) யேற்றியே
வட்ட யெழுத்தாலே கட்டி மரித்து
வைத்தகண் ணிக்குள்ளே சிக்கிய புள்ளதைப் — பிடித்து

சொல்லப் படாத சுகமாம் பொருளைச்
சூட்சாதி சூட்சச் சுருதி முடிவினில்
கல்லப் படாதது (காணப் படா)தது
காணுமல் காணவே கண்ட அதிசயம் — பிடித்து

(ஆணல்ல) பெண்ணல்ல [1] அலியது தானல்ல
அருவல்ல உருவல்ல (அண்டரண் டமல்ல)
காணும் பொருளல்ல காணுப் பொருளல்ல
காரணக் காட்சியாஞ் (சூட்சும) சூட்சத்தைப் — பிடித்து

வாழ்த்து

விந்துநா தம்வாழி! வேதப்பொ ருள்வாழி!
(சந்)திரர் சூரியர் தழைத்தென்னு ளும்வாழி!
எந்தன் குருவாழி! இந்தலோ கம்வாழி!
சங்கக்குற வஞ்சியுங் கற்பகா லம்வாழி! — பிடித்து

பொன்னுக ரச்சடை மேவியே வாழும்
குருச்சென்ன வீரய்யர் பாதத்தின் முடிவாழி!
பன்னுத மிழ்க்குதவும் பரிமேல ழகரென்பார்
(பாரிலில் மன்னிச்) சுகமாக வாழி — பிடித்து 35

வாழ்த்து

கலித்துறை

என்குரு வாகிய .... டியைப்
பொன்குரு வாமென்று போற்றிநின் றிங்கே விளங்கிநிற்கும்
(தன்)குரு வாகும் பரிமே லழகா தரணிதன்னில்
இன்புற் (றியம்பு முப)தேசம் நாளு மிலங்கிடவே! 36

---

1. அதியது என்றுளது.

விருத்தம்

குமர குருபர னோதுங் (குறவஞ்சிக்) கோர்வைதன்னைச்
சமரச மாகப் படிப்பவர் கேட்பவர் தான்முழுதும்
அமரர்கள் போற்றுங் குமரேசர்க் கென்றும் அடிமையாய்த்
(தமருடன்) வாழ்பவர் சாயுச் சியபதஞ் சார்பவரே !

குருவே துணை

(குமரேசர்பேரில் ஞானக்) குறவஞ்சி எழுதி முடிந்தது முற்றும்.

கர வருடம் தை-மீ … … … … வாரமும் ரேவதி நட்சத்திரமும் பஞ்சமி திதியும் … … … … நாளில் எழுதினது.

இந்த ஏடு சின்னறு பாளையம் பெரிய .. … … டு. ஏதாமொருவன் எடுத்தால் படித்துப் பார்த்துக் கொ(டுத்துவிடவும்.)

ஞானக் குறவஞ்சி

பகுதி-2

காப்பு

அறிதிருப் பரமு மாண்டொன்
றனுபவிக் கதிப னென்னச்
சரவண பவனுஞ் செந்தில்
வேலவன் மீதி லிந்த
நற்சிவ ரூப மான
நாடகக் குறத்தைப் பாட
சிற்பர ரூபத் தாறக்
கருத்தது காப்புத் தானே! 1

பிர(ம)மு மலையா(ய்த் தோன்றி
பிரணவங் கொண்)டே நின்ற
சரமிரு பிறத்தை யாகத்
தற்பறச் (சரமா நித்தம்)
கரமென்னு மறிவைக் காட்டிக்
கையெனு (மெய்ப்பொ ருள்தான்)
பரமென விருந்த ஞானப்
பரகதிப் பேருண் டாமே! 2

குறவன் தோற்றம்

[1] குஞ்சரப்பொன் னடிவணங்கி மன்னீ ரிட்டு
(க)மூலிக்குள் ளே(ாட)மிட்டுக் குறிக்கெட் டாத
தஞ்சமென்று கச்சைகட்டி அறிவாங் கண்ணி
தனையெடுத்துச் சகவாசி பூட்டிக் கட்டி
நெஞ்சிலிடை பிங்கலையா மிரண்டுந் தாக்கி
நினவென்னும் (அவ்)வளியால் நினைவைப் பார்த்து
பஞ்சபட்சி யிறகணிந்து திருச்செந் தூர்க்குள்
பாண்டிமையக் குறவன்வந்து தோன்றினனே! 3

சிந்து

அறிய ஞேநம சிவாய மென்னுஞ்
சத்தாதி யந்த மனுதியி லுண்ணு
நடுதறி யூடே தெரியாமல் தெரியுஞ்
செந்தூரில் நாட்டுக் குறவனும் நானே! 4

1. இதன் முன்னுள்ள பாடல், பின் 12-ம் பாடலாகச் சேர்க்கப்பட்டுளது.

ஓகார மான நகார (மாகி)
(மகார யகார மாகியே நாளுஞ்)
சிகார வகார மகார மான
அனாதி நாட்டுக் குறவனும் நானே! 5

(நன்றான) ரூபம் (தருமவ) னியிலே
பாயும் நன்னாத ரூபவெ ளியினில்த்
தோயும் மோன ரூபம்வைத் ததிருச்
செந்தூர் நாட்டுக் குறவனும் நானே! 6

பஞ்ச காமப் புலாதியைத் தட்டி
பசுபதி பாச மூன்றையுங் கட்டி
அஞ்சினா லஞ்(சதுக் கப்பாலே நி)ன்ற
அனாதி நாட்டுக் குறவனும் நானே! 7

தொம்மென் றாடிச் சுருதி முடிந்ததைச்
சொல்லாமல் (சொல்லி நின்றாடி யாடி)யும்
அம்மென் றோதிக் கடந்த அதீத
அனாதி நாட்டுக் குறவனும் நானே! 8

(அன்றான அப்பாலு) முப்பாமு மற்ற
ஆனந்த மோட்சஞ் சுழிமு னைக்குள்
நின்று (நிலைவிடும் நேர்த்தியாஞ் செந்தூர்)
(நன்றான நாட்டுக் குறவனும் நானே!) 9

(மன்னு) மனமாய் கைத்திரோ தாயியு
மாய்கையு மாசில்லா வுண்மை தன்னை
என்னு ளுஞ்சுக சுத்த அதீத
சுருதி நாட்டுக் குறவனும் நானே! 10

சத்தி வட்ட மதுக்குள்நின் றாடித்
தானவ னென்னும் ஆனந்த மாடி
சுத்த வெட்ட வெளிக்குள் ளிருந்த
செந்தூர் நாட்டுக் குறவனும் நானே! 11

குறவன் தன் சொந்தமலை கூறுதல்

[1] முந்தமலைக் (குள்ளிருந்த) மோனமலை
முடிவி லிருந்த மூலமலை

1. இது, முதல் 8-வது எண்ணுள்ள செய்யுளாகும். இடங்கருதி ஈண்டு தரப்பட்டுளது.

அந்தமலைக் குள்(குறவ னுடிவந்த)
(ஆ)திமலை (வேதமலை சோதிமலை)
சந்தமலைக் குள்குறவன் (றனை)வந்து
தடுத்தாட் கொண்டனுள் முதலாய்ச்
சொந்தமலை யாஞ்சந்திர கிரி(யெனும்)
(கந்த)மலை யெனக்குக் காணியையே! 12

குறவன் சிவபட்சி வருவதைக் கூறுதல்

விருத்தம்

ஓ(ம்)சிவா யெ(ன்ற சுத்த ஒளியினில்) வெளியாய் நின்று
வாசிவா பென்ற மோன மலையிலே யிருந்த பட்சி
பேசிவா யென்ற (ரூபப்) பிரணவ குளத்தை நாடி
நீசிவா யென்ற ஞான நிலையிலே வருகு தையே! 13

சிந்து

வருகுதையே — சிவபட்சி — வருகுதையே

சுருதியி லக்குரு வைகிரு ரண்டடிச்
சக்கர வாளப்பு ளன்றி(யே நாடி)
பிரணவக் குளத்தி லிரங்கி (யிரங்கி)
அங்கென்ற பத்திலே உங்கென்ற வித்திலே — வருகு

முக்கோணச் சிம்பு ளண்டர(ண் டபட்)சி
மூலக் குளத்துக்கு ஞால உருக்கொண்டு
சற்கோணம் விட்டது வில்புரு வம்நடுச்
சத்தி சிவபட்சி சுத்த (வெளியி)லே — வருகு

எட்டெட் டறுபத்து நாலு கரணத்
திறைக்கு முறைக்கு மடங்காமல் நின்றது
வட்ட அறுக(தத் திட்டுக்குள் ளே)மேய
எட்டியெட் டிப்பார்த்து நெஷ்டைக்குள் ளேயதோ-வருகு

முன்னும் பின்னும் நடுவெனுந் (தலத்திலே)
மூல முதலென நின்ற சிவபட்சி
உன்னு மறிவிலே உண்மை லுன்னியே
(ஓமென்) நிறைதேடி (ஓங்கார வானிலே) — வருகு 14

குறவன் பேசாதிருக்குமாறு கூறுதல்

கலித்துறை

கருதி முடித்த பரவெளி தன்னில் க(ருவலங்கொ)ண்
டிருதி முடிந்த யிடந்தனி லேயிருப் பானபட்சி
பருதி முடிந்த பதிதனில் மேயப் பதனமென்று
சுருதி முடிந்ததைக் கெம்பாதே யென்றினிச் சொல்லுவனே ! 15

சிந்து

கெம்பாதடையே — பொறு பொறு கெம்பாதடையே !

கெம்பாத டையே அம்பர்செங் காலி
கீழு மேலுநடுக் கேசரந் தன்னில்
(தம்)படிக் குட்டத்தில் வட்டத்தி லேநடுத்
தானத்தில் மேயிது கானத்தில் பாயாமல் — கெம்பா

முப்பாழுக் கப்பால் முடிந்த தலத்திலே
மூலத்தி லேலயக் காலத்திலே மேய்ந்தது
அப்பாழுக் கப்பால்பின் னப்பாலே போகாம
லாதியு மந்தமு மாக யிருக்குது — கெம்பா.

வாசகம் வாசித்தாப் போலே சிவபட்சி
வந்தது வாசிவா யென்ற யிறைகொத்தி
ரேசக பூரக கும்பகந் தன்னிலே
நித்தமு மேயிது சத்திய மேசொன்னேன் — கெம்பா.

ஆருறு மாறுபத் தாறுக்குள் ளேமேய்ந்த
அந்த சிவபட்சி அன்பி லிருக்குது
பேருக நாமும் படிக்க மணங்கொண்டோம்
பேசாமல் பேசிய பேரின்பப் பத்திலே — கெம்பா 16

குறவன் சிவபட்சியைச் சுற்றி வளைத்தல்

விருத்தம்

[1] சுத்தவட் டத்தில்நின்ற சதாசிவத் தாண்டவ
மென்றறி
ஒத்தவட் டத்தொளியா யொளிக்குளே யொளிந்துநின்ற
உபாயத்தைப் பாரையே

1. இவ்வரியில் சீர் குறைந்துளது.

சித்தவட் டத்தில்தோருத வட்டமாய்ச் சிவந்தவட்டத்
தருள்மோன மாய்நின்ற
சுத்தவட் டத்தில்மேயிற பட்சியைச் சுற்றிவந்து
பிடிப்பது சூட்சுமமே! 17

சிந்து

சுத்தி வாடையே!—கலையாதே சுத்திவாடையே!

சுத்திவா டையே சித்தாதி சித்தெல்லாம்
தூரத்தி லேயோட்டத் தேறத்தி லேவந்து
அத்துவி தங்கொண் டொதுக்கிய சைவர்
அங்கனைத் கங்கனைக் கங்கனே தானேநீ — சுத்தி

பைங்கர மாறு பால்க்கர [1]மேலும்
பத்தக் கரம்பனி ரண்டும் பதினாறும்
ஐக்கர காலக் குளத்தி லிறங்கியே
ஆனந்த பட்சிக்குத் தானந்த பட்சிபோல்—சுத்தி

வஞ்சம லாதிப்பிர பஞ்சத்தி லேமேயும்
வாசிவா யென்ற சிவானந்தப் பட்சியைப்
பஞ்சப் புலாதிப் பறவை யளையொக்கப்
பத்தியென் றுக்கி பாதத்தில் கலந்துநீ — சுத்தி

ஆணுங் காமிய மாய்கையெ னும்பட்சிக்
கப்பா லிருக்குது அந்தச் சிவபட்சி
(கா)ணு நமக்கது காணு மறிவென்ற
கண்ணிக்குள் ளேவரும் புண்ணியம் பாத்தது—சுத்தி 18

சிவபட்சி போகாமல் குறவன் காத்தல்

கலித்துறை

அந்தரந் தன்னி லமர்ந்திட்ட பட்சியை அன்பறிவா
மந்திரத் தாலழைத் தேன்கிட்ட வந்தது வந்தவுடன்
சிந்துரத் [2]தாலுள்த் திலைதமிட் டேன்செந்தி லான்கொடுத்த
தந்திரத் தால்பட்சி போகாமல்த் தானின்று சாதித்தனே! 19

---

1. மேழும் போலும். 2. தாலுணத் என்றுளது.

சிந்து

போகாமலேயே! — சிவபட்சி — போகாமலேயே!

யோகாம லேயேயென் னுகத்தி லாகம்
பொருந்துஞ் சிவபட்சி (போதமும்) வீணி
லேகாந்த மாக யிருக்க வசப்படு
மின்பக் குளம்விட்டுத் துன்பக் குளத்துக்குள் — போகா

மோட்சாதி மோட்சமாய் மோட்சமெ னுஞ்சிவ
மோனத்தி லேநடுத் தானத்தி லேபதி
சூட்சாதி சூட்சமாய் (சூழ்ந்த) சிவபட்சி
தூரத்தி லேகாமல்ச் சாரத்தி லேயோடிப் — போகா

பாலரூ பம்போலே யிறுக்கின பட்சி
(பத்துக்)கொன் ருகப் பழுத்துக் கொழுத்தது
கோலரூ பம்விட்டுத் தொனிரூபங் கொண்டொரு
சொட்டுப்போட் (டேநம்)மை விட்டுப்போட் டோடிப் —
போகா

ஓமென்று உண்ணும் உண்ணும லேயுண்ணும்
ஒளிக்குள் ளேவெட்ட வெளிக்குள் நமக்கது
ஆமென் றிருக்கிற பட்சியைப் பாருன்
அறிவுக் கறிவென்ற வட்டத்தை விட்டப்பால் - போகா 20

குறவன் சிவபட்சி இரை மேய்தலைக் கூறுதல்.

கலித்துறை

பையி லிருந்த பதமல(ர்)ப் பாண்டப் பதங்கமெனும்
பொய்யி லிருந்து புகுந்துகொண் டாடிப் பொருள்விளைந்த
செய்யி லிருந்து யிருதனை யொக்கச் செலுத்தியெந்தன்
மெய்யி லிருந்து விளையாடி யேபட்சி மேயிதய்யே! 21

சிந்து

மேயினுமையே! — சிவபட்சி — மேயினுமையே!

மேயினு மையே தோயாமல் தோயும்
விறுமத்தி லேமெய்க் கிறுமத்தி லேவிந்து
பாயாமல் பாயும் கண்ணிக்குள் ளேவரும்
பார்த்துக்கோ பட்சியுங் கூத்தாடிக் கூத்தாடி — மேயினு

சொல்லுஞ் சுருதிக்கு மெட்டாமல் நின்று
தூராதி தூர அதிதூர மாகிய
அல்லும் பகலு மிரந்த தலத்திலே
ஆதியு மந்தமு மாக யிருந்தன்று — மேயினு

ஊருங் கருணை யுளமாங் கருத்தை
உருக்கி மெஞ்ஞானத் துறவது வாகியே
ஆறு தல(மும் அலைந்து) பறந்து
அதீதத்தி லேசுகா தீதத்தி லேயன்று — மேயினு 22

குறவன் கண்ணி கொண்டுவரக் கூறுதல்

விருத்தம்

கருக்கலை மூங்கில் தன்னைக் கண்ணிக்கா லாக்கி ஞான
எருக்கிலை நாரைக் கண்ணி யிணங்கவே முறுக்கிச் சில்லு
உருக்கலை நூ(லால்ச்) சுற்றி உரையற்ற கண்ணி கூட்டிக்
குருக்கலை (பட்)சிக் காகக் குற்றுவேன் பிடிப்பே னையே! 23

சிந்து

கண்ணி கொண்டுவாடா — அருளென்னுங்
கண்ணி கொண்டுவாடா

கண்ணி கொண்டுவா யெண்ணு மெழுத்துங்
கடந்த சிவபட்சி கைக்கு ளகப்படப்
புண்ணிய மான பயிரி லிருக்குது
பொட்டென ஓடிவா விட்டகு றையென்ற — கண்ணி

பம்பரம் போலே நடிக்கின்ற சூத்திரப்
பாவையை யாட்டு பரப்பிரம்ம சூட்சமாய்
அம்பரக் குண்டலிக் குள்ளே சிவபட்சி
அன்று யிருக்குது உன்னும லுன்னியே — கண்ணி

அல்லும் பகலு மிரந்த யிடத்தில்
அதீத சுகாதீத மாகிய பட்சிக்குச்
சொல்லுஞ் சுருதி முடிவையுங் காட்டி
சூட்சாதி சூட்ச அதிசூட்ச மாகிய — கண்ணி

வானற்று மண்ணற்று அம்பு தணலற்று
வாயுவ தான மதமிதம் ரண்டற்று

ஞானத்தில் நின்ற (சிவபட்சி தன்னை)
(தா)னென துவென்று பிடிக்க அறிவென்ற—கண்ணி 24

குறவன் சிவபட்சி பிடித்ததைக் கூறுதல்

விருத்தம்

[1] இரத்தினி துருவாய் நானென் றியங்குமிச் சின்னந் தன்னில்ச்
சரத்தினி லுருவாய் இன்பத் தலத்தினி லசைவில் லாமல்
பரத்தினி லுருவாம் ஞானப் பாதநான் பிடித்தே னையே! 25

சிந்து

பிடித்துக் கொண்டேனே! சிவபட்சி
பிடித்துக் கொண்டேனே!

பிடித்துக் கொண்டேனே நொடிக்குள் நொடியாய்ப்
பின்னு முன்னும் நடுவென்னுந் தலத்திலே
நடிக்கும் பொற்பதங் கைக்குள்ளே சிக்கென்ன
நாதமும் விந்துவு மாண்டுமொன் றனதில்—பிடித்து

உச்சிக்குங் கீழேயுண் ணுவுக்கு மேல்வந்து
உன்னும லுன்னி யிருக்கின்ற ஆனந்தப்
பட்சிக் கறிவென்ற கண்ணியை வைத்துப்பொற்
[2] பாதத்தைப் பாதத்தைப் பார்த்ததைச் சிக்கெனப்—
பிடித்து

ஆதிக் கனாதியாய்த் தோன்றும் பரப்பிரம்ம
அம்பரப் பட்சியை யம்பர மாம்வட்ட
வீதிக்குள் வீதியாய் நின்ற நடுவணை
வெட்ட வெ(ளியி)லே திட்டமு டனேநான்—பிடித்து

உன்னப் படாதொன்றுஞ் செய்யப் படா(ததை)ப்
....
பன்னப் படாததைப் பேசப்ப டாததைப்
பேசாமல் பேசிய பேரின் பத்திலே—பிடித்து 26

---

1. இதில் மூன்று வரிகளே உள்ளன.
2. இருமுறை வந்துள்ளது.

வாழ்த்து

விருத்தம்

பிடிபடாப் பட்சிதன்னைப் பிடித்தபின் பிரமமானேன்!
அடிமுடி அறியாப்போதம் பரிவினு லறிந்தோர்வாழி!
வடிவது குறியாய்நின்ற மனோன்மணி மலர்த்தாள்வாழி!
குடிமுழு தடிமைகொண்ட குருபரன் வாழிதானே! 27

குருபாதமே கெதி

பரதேவதை துணை

2-ம் பகுதி முற்றும்.

ஞானக் குறவஞ்சி

பகுதி-3

காப்பு

விருத்தம்

பொன்னுலகி லுள்ளோரைப் பொருந்தித் தவமறிய
மின்னுலகில் மெஞ்ஞானக் குறவஞ்சி மேலதாக
திண்ணமறத் தன்னிலுதிப் போரைநான் காணத்
தன்னினவில் தன்னறிவில் தரிப்பதே காப்பு!

சிங்கன் சிங்கி தருக்கம்

ஆதிக்கு முன்னே அனுதி(யு) (மேதடி - சிங்கி) — அது
அந்தக் கருக்குழி முந்த யி(ரு)ளே — சிங்கா. 1

ஆதியு மென்னதில் சோதியு மென்னடி - சிங்கி — அது
சோதி யுதிரத்தில் (சுக்கிலம் பாய்ந்ததே) — சிங்கா. 2

ஆதியாய் வந்த அருப்பொரு ளென்னடி - சிங்கி — அது
ஆதி யுதிரத்தில் சோதி (யுருவடா) — சிங்கா. 3

ஆதி யனுதியுஞ் சோதியு மென்னடி - சிங்கி — அது
சோதியி லாதி சொரூபா யெழுந்தது — சிங்கா. 4

சோதியி லாதி சொரூப(ம)ான தெப்படி - சிங்கி — அதில்
ஏதமா முப்பொரு ளொன்ருய் முடிந்தது — சிங்கா 5

முப்பொரு ளென்றுநீ முன்சொன்ன தாரடி - சிங்கி — அது
அப்பனும் அன்னையும் ஆசையால் (ஒப்பினுர்) — சிங்கா. 6

எப்படி யுலகத்தி லிப்படி யுருவா (னேம்) - சிங்கி — அது
அப்பனும் அன்னையும் ஒப்பிய தாலல்லோ — சிங்கா. 7

(ப)ராப ரத்திலே பஞ்சவர் ணமேது - சிங்கி — அது
வேராகித் தூராகி விந்து நிறமடா — சிங்கா. 8

ஒண்ணுக்குள் ஐவர்க ளுண்டான தெப்படி - சிங்கி — அது
ஒன்ருேடே ஒன்று ஒடுங்கி யிணைந்தது — சிங்கா. 9

மூலக் குகைக்குள்ளே முச்சுட ரென்னடி - சிங்கி — அது
முப்பொரு ளொன்ருய் முடிந்த நினைவடா — சிங்கா 10

மூலக் குகையென்ற கோட்டைக் கரசாரு - சிங்கி — அது
கருநாகத் திலான (நடு)நிலை யல்லவோ — சிங்கா 11

எவ்விடம் மூலக் கிழங்கு முளை(த்தது) - சிங்கி — அது
கண்ணிடை யான நடுநிலை யல்லவோ — சிங்கா. 12

முன்னே முளையாய் மு(ளைத்திட மெவ்விடம் - சிங்கி — அது)
(மூல) முனையிரு கண்ணித (முல்லவோ) — சிங்கா. 13

பின்னை யுருவாய் முடிந்திட மெவ்விடம் - சிங்கி — அது
பெண்ணு மாணுமாகப் பிறந்த தலமடா — சிங்கா. 14

இந்த உடலுக்குள் வேறென்ன தூறென்ன - சிங்கி — அது
இந்த உடலுக்குள் வேருகு மூலமே — சிங்கா. 15

இந்த உடலுக்குள் உயிர்வந்த தெப்படி - சிங்கி — அது
தொந்தி நடுக்குழி தொப்புள் வழியடா — சிங்கா. 16

இந்த உடலாக முன்னெங்கே யிருந்தது - சிங்கி — அது
அந்தர மாயடா மாக்கொடி நின்றது — சிங்கா. 17

மாக்கொடி யானதே மானிட ரேன்சொன்ஞர் - சிங்கி — அது
மட்டில (டங்காது) மாக்க(யம்) பாரடா — சிங்கா. 18

இந்த உடல்க்கனி எந்த உடல்க்கனி - சிங்கி — அது
முந்திய தொப்புளு மாக்கொடி யல்லவோ — சிங்கா. 19

எந்த வழியாலே வந்தோம் உலகிலே - சிங்கி — அது
எல்லாம் முடிந்த பொருள்வழி யாலே — சிங்கா. 20

ஆங்கார உடலுக்குள் ஆணிதா னென்னடி - சிங்கி — அது
ஓங்கார மூலத் துள்ளொளி யல்லவோ — சிங்கா 21

ஆணி யாய்வந்த அமுதப்பொரு ளென்னடி - சிங்கி — அது
தோணியாஞ் சற்குரு முதல்நாத மல்லவோ — சிங்கா. 22

இந்தப் பொருள்வந்த தெந்த வழியாலே - சிங்கி — அது
அந்தக் கதிர்மதி வந்த வழியடா — சிங்கா. 23

ஆசைகொண் டுநம்மை ஆட்டு(கி)ற தாரடி - சிங்கி — அது
அக்கினி வாய்வுநீ(ர் மண்ணுங் கலந்தது — சிங்கா.) 24

ஆசார வாச லனுபோக மாரடி - சிங்கி — அது
அங்கம் பொருந்திய பங்கம னல்லவோ — சிங்கா. 25

தன்னை வணங்குந் தலமெது சொல்லடி - சிங்கி — அது
கண்ணிடை யான நடுநிலை யல்லவோ - சிங்கா. 26

என்ன விதமாகத் தன்னை வணங்கலாஞ் - சிங்கி — அது
இறையவன் தாய்தந்தை (யாகிய மார்க்கமாய்) — சிங்கா. 27

இறையை யறிகிற தெப்படிச் சொல்லடி - சிங்கி — அது
எங்கும்நின் றுடிய தன்னறி வாகுமே — சிங்கா. 28

தன்னை யறிகிற தலமெது சொல்லடி - சிங்கி — அது
[1] ஒன்றைப் பொருந்தி யொடுங்கி யிருப்பது — சிங்கா. 29

என்ன விதமாக [2] ஒன்றைப் பொருந்தலாஞ் - சிங்கி — அது
எல்லா மானது யிருளா யிருப்பதே — சிங்கா. 30

உச்சித வெள்ளை யுயிரெழுத் தென்னடி - சிங்கி — அது
நச்சர வாடு நடுநிலை யல்லவோ — சிங்கா. 31

நடுநிலை யானதை நாடுற தெப்படி - சிங்கி — அது
நாட்டமுந் தேட்டமும் ஒன்று படுத்தியே — சிங்கா. 32

தேட்டமு [3]நாலுந் திருந்துற தெப்படி - சிங்கி — அது
திருவைப் பொருந்தி யொருமித் திருப்பது — சிங்கா. 33

ஒருமித் திருக்கிற ஓரிட மெவ்விடம் - சிங்கி — அது
ஒன்றாய் இரவு பகலா யுதித்திடம் — சிங்கா. 34

இரவு பகலென்று என்னத்தைச் சொல்லலாஞ் - சிங்கி — அது
இரவு பகலிடை பிங்கலை வாசியே — சிங்கா. 35

இடைகலை பிங்கலை என்னத்தைச் சொல்லலாஞ் - சிங்கி — அது
இடைகலை சந்திரன் பிங்கலை சூரியன் — சிங்கா. 36

சந்திரன் சூரியன் ஒன்றான தெவ்விடம் - சிங்கி — அது
சகல கலையு(ம் பொருந்துஞ் சுழிமுனை) — சிங்கா. 37

என்னத்தி (லேபரம்) ஏறிநின் றுடுது - சிங்கி — அது
ஒண்ணுக்குள் வாசி நடம்புரிந் தாடுது — சிங்கா. 38

---

1. யொன்னை என்றுளது. 2. வொன்னை என்றுளது.
3. நாளும் போலும்.

என்ன விதமாய் எடுத்துநின் ருடலாஞ் – சிங்கி — அது
ஏத்தமும் ஆத்தமும் இணங்கிநின் ருடலாஞ் -சிங்கா. 39

மாத்திப் பிடிக்கும் மருந்தென்ன சொல்லடி – சிங்கி — அது
மாளாமல் மாண்டு மறைந்து இருப்பதே - சிங்கா. 40

அன்பத்தோ ரட்சர மறியச்சொன்(ன தா)ரடி - சிங்கி — அது
அஞ்சும் பொருந்திய ஆகாச வட்டமே — சிங்கா. 41

அஞ்செழுத் தானதை அறியச்சொன் னுரடி - சிங்கி — அது
அஞ்சும் பொருந்திய மாச்சுளி மூன்றுமே - சிங்கா. 42

(ப)த்தவி [1] சேஷம் இத்தனையார் சொன்னுர் – சிங்கி — அது
புத்தியாய் பீறு முகம்மது சொன்னது – சிங்கா. 43

ஆக கண்ணி [2] 43

3-ம் பகுதி முற்றும்.

இதன் பின்னர் கீழ்க்கண்ட இரு பாடல்கள் காணப்படுகின்றன.

பாராட்டுரா பாராட்டு பரகெதிக்கு வழிகேட்டு — அது
நூற்றிருபது சீட்டுஅன் னேரமுமதே ஒருலோட்டு,

கம்பமற்ற பாற்கடலைக் கலங்கென்ருல் கலங்குமோ?
இன்பமற்ற யோகிக்கு இருளுவந்து மூடுமோ?

முற்றும்.

---

1. சௌம் என்றுளது. 2. 86 என்றுளது.

PATHYĀPATHYAM

(Food, Prescribed and Proscribed)

Part II

By

VAIDYA VISARADA

C. RAJARAJESVARA SARMA,

Junior Research Officer,

Literary Research Unit,

Central Council of Ayurvedic Research,

Sarasvati Mahal, Thanjavur.

(Formerly Professor & Physician of
Sri Venkaṭaramana Ayurvedic College & Dispensary, Madras)

Published By

Vidvan A. VADIVELAN,

Honorary Secretary,

FOR THE ADMINISTRATIVE COMMITTEE OF
THE TANJORE MAHARAJA SERFOJI'S SARASVATI MAHAL LIBRARY,
THANJAVUR.

Ṣaka 1896 Price Re. 1-25. A. D. 1974

பத்தியமும் அபத்தியமும்

இரண்டாம் பகுதி

ஆசிரியர்:

வைத்திய விசாரத

சி. இராஜராஜேச்வர சர்மா,

ஆயுர்வேத ஆராய்ச்சியாளர்,

மத்திய அரசாங்க ஆயுர்வேத நூல் ஆராய்ச்சித் துறை,

சரஸ்வதி மஹால், தஞ்சாவூர்.

(முன்னாள் வெங்கடரமணா ஆயுர்வேத கலாசாலை ஆசிரியரும்

ஷை வைத்தியசாலை வைத்தியரும்)

தஞ்சை சரஸ்வதி மஹால் நூல்நிலைய நிர்வாகக் குழுவிற்காக

கௌரவ காரியதரிசி

வித்துவான் **அ. வடிவேலன்** அவர்களால்

வெளியிடப்பட்டது.

ஸ்ரீ வாணீ விலாஸ் அச்சகம், ஸ்ரீரங்கம்.

சகம் 1896 விலை ரூ. 1-25. கி. பி. 1974

PREFACE

This is the sixth of the series of pamphlets on Health and Hygiene published through our Library Journal and released as off-prints. Two of the five earlier tracts, entitled Ayurvedopadesa, dealt with the rules of healthy life to be observed in one's daily routine, one entitled Garbhini Raksa, with the rules of maternity and the other, called Kaumara Bhrtya, with the care of children. This topic Pathyapathya is meant to setforth, at a practical level, the basic principles of food and nutrition elaborating on the healthy and the unhealthy qualities of the several articles of food and drink in common usage. The first part of this book dealing with grains, pulses, varieties of meal and fruits was published in 1972. This part is devoted to vegetables, edible roots, greens etc.,

The treatment of the topics by Vaidya Visarada, Thiru C. Rajarajeswara Sarma, is as authoritative as it is simple and clear. The quotations from the standard classics of Ayurveda make the compilation authoritative and the lucid exposition of the subject matter in easy Tamil brings the classical knowledge within the easy reach of even laymen. The work being the first of its kind, the author deserves our sincere thanks for his service and our hearty congratulations on his achievement. We have no doubt that, like the previous book-lets of this series, this one also will be heartily welcomed.

A. VADIVELAN,
Honorary Secretary,
T. M. S. S. M. Library.

Thanjavur,
20—8—1974.

|| श्रीरस्तु ||

முன்னுரை

"षट्त्रिंशतं सहस्राणि रात्रीणां हितभोजनः ।
जीवत्यनातुरो जन्तुः ... ... ॥ — चरकसंहिता

"இதமான உணவை உட்கொள்ளும் மனிதன் முப்பத்தாறுயிரம் இரவுகள் (நூறு வருடங்கள்) நோயற்றவனுக வாழ்கிருன்" என்னும் சரகாசார்யரின் பொன்மொழி இதமான உணவின் பெருமையை எடுத்துக் கூறுகின்றது.

ஆகவே அவரவர் நிலைக்கேற்ற உணவையே தேர்ந்தெடுத்துப் பயன் படுத்துவதற்குதவுமாறு உணவுப் பொருள்களின் குணங்களை விளக்கும் பகுதிகளை ஆயுர்வேத நூற்களான சரகஸம்ஹிதா, ஸுச்ருத ஸம்ஹிதா முதலிய பழைய நூல்களிலிருந்தும், பாவபிரகாசம், சாலிக்கிராமநிகண்டு போன்ற நவீன நூல்களிலிருந்தும் தேர்ந்தெடுத்து, ஒன்றுகூட்டி, வரிசைப் படுத்தி, எல்லோருக்கும் பயன்படுமாறு விரிவான மொழிபெயர்ப்புடன் "பத்தியாபத்தியம்" என்ற பெயரால் வெளியிடக்கருதி இதனை எழுதலானேன். இதன் முற்பகுதி முன்பே வெளியிடப்பட்டுள்ளது.

இந்நூலின் பிற்பகுதியை இப்பொழுது பேரன்புடன் வெளியிட்டுதவிய தஞ்சை ஸரஸ்வதி மஹால் காரியதரிசி உயர்திரு. வித்துவான் அ. வடிவேலன் அவர்களுக்கும், மேற்படி நூலகக் காப்பாளர் உயர்திரு. டி. எஸ். கிருஷ்ணமூர்த்தி, பி. ஏ., அவர்களுக்கும், இதை தொகுப்பதில் பெரிதும் வழிகாட்டி ஊக்குவித்துதவிய எனது குரு உயர்திரு. வி. எஸ். வெங்கடஸுப்ரமண்ய சாஸ்திரிகள் அவர்களுக்கும், தெலுங்கைத் தாய் மொழியாகக் கொண்ட எனக்கு இந்த தமிழ் மொழிபெயர்ப்பில் உதவிபுரிந்த நண்பர் புலவர் திரு. எஸ். இராமலிங்கம் பிள்ளை அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஸரஸ்வதி மஹால்,
தஞ்சாவூர்.

சி. ராஜராஜேச்வர சர்மா.

பாகற்காயின் குணம் —

कारवेल्लं सकटुकं दीपनं कफजित्परम् । —अष्टाङ्गहृदयम्
... भेदनं तिक्तमवृष्यमहिमं लघु ।
हन्त्यरोचकपित्तास्रकफपाण्डुव्रणकृमीन् ।
श्वासकासप्रमेहाश्मकोठकुष्ठज्वरानपि ॥ —पथ्यापथ्यविबोधः

பாகற்காய் — சிறிது கார்ப்புச் சுவையுள்ளது. பசித்தீயைத் தூண்டுகிறது. கபத்தைக் கண்டிப்பதில் மிகச் சிறந்தது. — அஷ்டாங்கஹ்ருதயம்

மலத்தை வெளியேற்றுகிறது. ஆண்மையைக் குறைக்கிறது. வெப்பத்தை உண்டாக்குகிறது. எளிதில் ஜீர்ணமாகக்கூடியது. ருசியின்மை, பித்தம், ரக்தத்தைப்பற்றியநோய், கபம், சோகை; விரணம், வயிற்றில் உண்டாகும் பூச்சி இரைப்பு, இருமல், நீரிழிவு, மூத்திரப்பையில் கல் உண்டாவது, கோடம் (ஒருவித தழும்பு) குஷ்டம், ஜ்வரம் ஆகியவற்றைப் போக்குகிறது. — பத்தியாபத்திய விபோதம்

கத்தரிக்காயின் குணம் —

वृन्ताकं स्वादु तीक्ष्णोष्णं स्वादुपाकमपित्तलम् ।
ज्वरवातबलासघ्नं दीपनं शुक्रलं लघु ॥

अपरं श्वेतवृन्ताकं कुक्कुटाण्डसमं भवेत् ।
तदर्शस्सु विशेषेण हितं ... ... । —भावप्रकाशः

वार्ताकं कोमलं पथ्यं चक्षुष्यं सर्वदोषजित् । —पथ्यापथ्यविबोधः

கத்தரிக்காய் — இனிப்பானது. கடுமையானது. வெப்பத்தை உண்டாக்குகிறது. ஜீர்ணமான பின்பு இனிப்புத் தன்மையை உடையதாயிருப்பது பித்தத்தை அதிகப்படுத்துவதல்ல. ஜ்வரம், வாயு, கபம், ஆகியவற்றைப்போக்குகிறது. விந்துவை வளர்க்கிறது. எளிதில் ஜீர்ணமாகக் கூடியது.

வெள்ளை நிறம் கொண்ட கத்தரிக்காய் — உருவத்தில் கோழி முட்டைக்குச் சமமாக இருக்கும். இது மூலநோய்க்கு மிகவும் இதமானது. — பாவபிரகாசம்

கத்தரிப்பிஞ்சு — இதமானது. கண்ணுக்கு நலம் செய்கிறது. வாயு, பித்தம், கபம் ஆகிய மூன்று தோஷங்களையும் போக்குகிறது. — பத்தியாபத்திய விபோதம்

பீர்க்கங்காயின் குணம் —

राजकोशातकी शीता मधुरा कफवातकृत् ।
पित्तघ्नी दीपनी श्वासज्वरकासकृमिप्रणुत् ॥ —भावप्रकाशः

பீர்க்கங்காய் — குளிர்மையானது; இனிப்பானது, கபம், வாயு ஆகியவற்றை உண்டாக்குகிறது, பித்தத்தைக் கண்டிக்கிறது, பசித்தீயைத் தூண்டுகிறது. இழைப்பு, ஜ்வரம், இருமல், வயிற்றிலுண்டாகும் பூச்சி ஆகியவற்றைப் போக்குகிறது — பாவபிரகாசம்.

பெரிய பீர்க்கங்காயின் குணம் —

महाकोशातकी स्निग्धा रक्तपित्तानिलापहा । — भावप्रकाशः

பெரிய பீர்க்கங்காய் — நெய்ப்புடையது. ரக்தபித்தம் (கண், காது, மூக்கு, வாய், மலதுவாரங்கள், மயிர்க்காம்புகள் இவற்றின் வழியாக ரத்தம் கசிதல்) வாயு இவற்றைப் போக்குகிறது. — பாவபிரகாசம்

சுரைக்காயின் குணம்—

मिष्टतुम्बीफलं हृद्यं पित्तश्लेष्मापहं गुरु ।
वृष्यं रुचिकरं प्रोक्तं धातुपुष्टिविवर्धनम् ॥ —भावप्रकाशः

तुम्बी सुमधुरा स्निग्धा पित्तघ्नी गर्भपोषकृत् । — धन्वन्तरिनिघण्टुः

சுரைக்காய் — இதயத்திற்கு நலம் செய்கிறது. பித்தம், கபம், இவற்றைக் கண்டிக்கிறது. ஆண்மையை வளர்க்கிறது. உணவில் ருசியை உண்டுபண்ணுகிறது ரத்தம் முதலிய தாதுக்களை வளர்க்கிறது.

(பாவபிரகாசம்)

இனிப்பானது நெய்ப்புடையது, பித்தத்தை கண்டிக்கிறது. கருவை வளர்க்கிறது. —தன்வந்தரி நிகண்டு

அவிரைக்காயின் குணம்—

शिम्बीद्वयं च मधुरं रसे पाके हिमं गुरु ।
बल्यं दाहहरं प्रोक्तं श्लेष्मलं वातपित्तजित् ॥ — भावप्रकाशः

வெண்ணிற விதையுள்ள அவிரைக்காய், கரு நிறமுள்ள அவிரைக்காய் ஆகிய இரண்டும்— சுவையில் இனிப்பானவை. ஜீர்ணமான பின்பும் இனிப்புத் தன்மையை அடைபவை. குளிர்மையானவை. எளிதில் ஜீர்ண

மாகா. உடலைத் தேற்றுகின்றன. எரிச்சலைப் போக்குகின்றன. கபத்தை அதிகப்படுத்துகின்றன. வாயு, பித்தம் இவற்றைப் போக்குகின்றன.

—பாவ பிரகாசம்

கொத்தவிரைக்காயின் குணம்—

कोलशिम्बिः समीरघ्नी गुर्व्युष्णा कफपित्तकृत् ।
शुक्राग्निसादकृद्वृष्या रुचिकृद् बद्धविड् .... ॥ – भावप्रकाशः

கொத்தவிரைக்காய்—வாயுவைக் கண்டிக்கும். எளிதில் ஜீர்ணமாகாது. வெப்பத்தை உண்டுபண்ணும். கபம், பித்தம் இவற்றை அதிகப்படுத்தும். விந்துவை வளர்க்கும். பசித்தீயைக் குறைக்கும். ஆண்மையைப் பெருக்கும். உணவில் ருசியை உண்டாக்கும். மலச்சிக்கலை உண்டாக்கும்.

—பாவ பிரகாசம்

சிங்காடங்காயின் குணம் –

शृङ्गाटकं हिमं स्वादु गुरु वृष्यं कषायकम् ।
ग्राहि शुक्रानिलश्लेष्मप्रदं पित्तास्रदाहनुत् ॥ —भावप्रकाशः

சிங்காடங்காய்—குளிர்மையானது. இனிப்பு துவர்ப்புச் சுவைகளைக் கொண்டது. எளிதில் ஜீர்ணமாகாது. ஆண்மையை வளர்க்கிறது. இளகிப் போகும் மலத்தைக் கட்டும். விந்து, வாயு, கபம் இவற்றை உண்டாக்கும். பித்தம், ரக்தம், ஆகியவை சம்பந்தமான நோய்கள், எரிச்சல் ஆகியவற்றைப் போக்கும்.

—பாவ பிரகாசம்

கருணைக்கிழங்கின் குணம் –

दीपनः सूरणो रुच्यः कफघ्नो विशदो लघुः ।
विशेषादर्शसां पथ्यः ... ... ॥ —अष्टाङ्गहृदयम्

... ... प्लीह गुल्मविनाशनः ।
सर्वेषां कन्दशाकानां सूरणः श्रेष्ठ उच्यते ।
दद्रूणां कुष्ठिनां रक्तपित्तिनां न हितो हि सः ॥ —भावप्रकाशः

கருணைக்கிழங்கு — பசித்தீயைத் தூண்டுகிறது. உணவில் ருசியை உண்டாக்குகிறது. கபத்தைக் கண்டிக்கும். பிசுபிசுப்பற்றது. எளிதில் ஜீர்ணமாகக்கூடியது. மூலநோய் உள்ளவர்களுக்கு மிகவும் இதமானது.

—அஷ்டாங்கஹிருதயம்

மண்ணீரலைப்பற்றிய நோய், குல்மம் ஆகியவற்றைப்போக்குகிறது கிழங்கு வகைகளுள் கருணைக்கிழங்கு மிகவும் சிறந்தது.

கருணைக்கிழங்கு படை, குஷ்டம், ரத்தபித்தம் (கண், காது, மூக்கு, வாய், மலதுவாரங்கள், மயிர்க்காம்புகள் இவற்றின் வழியாக ரக்தம் கசிதல்) ஆகிய நோய்கள் உள்ளவர்களுக்கு நல்லதல்ல. —பாவபிரகாசம்

கருணைத் தண்டின் குணம்—

नालं तु सूरणं रुच्यं कफवातहरं लघु ।
अर्शसां तु विशेषेण हितं कामाग्निदीपनम् ॥ — मदनविनोदः

கருணைத்தண்டு—உணவில் ருசியை உண்டாக்குகிறது. கபம், வாயு இவற்றைக் கண்டிக்கிறது. மூலநோயிக்கு மிகவும் இதமானது. சிற்றின் பத்தைத் தூண்டுகிறது. —மதனவிநோதம்

சேப்பங்கிழங்கின் குணம் —

आलुकी बलकृत्स्निग्धा गुर्वी हृत्कफनाशिनी ।
विष्टम्भकारिणी तैले तलिताऽतिरुचिप्रदा ॥ — भावप्रकाशः

சேப்பங்கிழங்கு—வலுவைக்கொடுக்கிறது. நெய்ப்புடையது. எளிதில் ஜீர்ணமாகாது மார்புச் சளியை நீக்குகிறது. வயிற்றுப்பொருமலை உண்டாக்குகிறது.

நல்லெண்ணெயில் வறுக்கப்பட்ட சேப்பங்கிழங்கு — உணவில் ருசியை மிகவும் உண்டுபண்ணுகிறது. —பாவபிரகாசம்

சேப்பம் தண்டு, இலை ஆகியவற்றை சமைத்துண்ணலாம்.

காரட்டின் குணம்—

गाजरं मधुरं तीक्ष्णं तिक्तोष्णं दीपनं लघु ।
संग्राहि रक्तपित्तार्शोग्रहणीकफवातजित् ॥ — भावप्रकाशः

காரட்டு—இனிப்பு கசப்பு ஆகிய சுவைகளையுடையது. கடுமையானது. வெப்பத்தை உண்டாக்கும். பசித்தீயைத் தூண்டும். எளிதில் ஜீர்ணமாகக்கூடியது. இளகிப்போன மலத்தைக் கட்டக்கூடியது. ரக்த பித்தம் (கண், காது, மூக்கு, வாய், மலதுவாரங்கள், மயிர்க்காம்புகள் இவற்றின் வழியாக ரக்தம் கசிதல்) நாட்பட்ட வயிற்றுப்போக்கு, கபம், வாயு ஆகியவற்றைப் போக்கும். — பாவபிரகாசம்

சர்க்கரைவள்ளிக்கிழங்கின் குணம்—

पिण्डालुर्मधुरः शीतो मूत्रकृच्छ्रामयापहः ।
दाहशोषप्रमेहघ्नो वृष्यः सन्तर्पणो गुरुः ॥ —राजनिघण्टुः

சர்க்கரைவள்ளிக்கிழங்கு— இனிப்பானது. குளிர்மையானது. நீர்ச்சுருக்கு, எரிச்சல், ஒய்ச்சல், நீரிழிவு ஆகியவற்றைப் போக்கும். ஆண்மையை வளர்க்கும். உடம்பைத் தேற்றும். எளிதில் ஜீர்ணமாகாது.
— ராஜநிகண்டு

மாகாளிக்கிழங்கின் குணம்—

सारिवायुगलं स्वादु स्निग्धं शुक्रकरं गुरु ।
अग्निमान्द्यारुचिश्वासकासामविषनाशनम् ॥

दोषत्रयास्रप्रदरज्वरातीसारनाशनम् । —भावप्रकाशः
सारिवे द्वे तु मधुरे पित्तवातास्रनाशने ॥
कण्डूकुष्ठज्वरहरे मेहदुर्गन्धनाशने । —धन्वन्तरिनिघण्टुः

மாகாளிக்கிழங்கு — இனிப்பானது. நெய்ப்புடையது. விந்துவை வளர்க்கிறது. எளிதில் ஜீர்ணமாகாது. பசித்தீக்குறைவு, உணவில் ருசியின்மை, இளைப்பு, இருமல், அஜீர்ணம், விஷதோஷம், வாயு, பித்தம், கபம், ரக்தத்தைப்பற்றிய நோய், பெரும்பாடு, வயிற்றுப்போக்கு ஆகியவற்றைப் போக்குகிறது. நன்னாரிக்கும் இந்த குணங்கள் இருக்கின்றன.
— பாவபிரகாசம்

அரிப்பு, குஷ்டம், ஜ்வரம், நீரிழிவு, துர்நாற்றம், பித்தம், வலி, எரிச்சலுடன்கூடிய வீக்கம் ஆகியற்றைப் போக்குகிறது. நன்னாரியும் இந்தக் குணங்களையுடையது. — தந்வந்தரிநிகண்டு

நிலப்பூசனிக்கிழங்கின் குணம்—

विदारी मधुरा स्निग्धा बृंहणी स्तन्यशुक्रदा ।
शीता स्वर्या मूत्रला च जीवनी बलवर्णदा ।
गुरुः पित्तास्रपवनदाहान् हन्ति रसायनम् ॥ —भावप्रकाशः

நிலப் பூசணிக்கிழங்கு— இனிப்பானது. நெய்ப்புடையது. உடலைத் தேற்றுகிறது. முலைப்பால், விந்து இவற்றை வளர்க்கிறது. குளிர்மையானது. குரலுக்கு நலம் செய்கிறது. மூத்திரத்தை அதிகப்படுத்துகிறது. ஜீவ சக்தியைப் பெருக்குகிறது. வலிமை, நிறம் இவற்றைத் தருகிறது. எளிதில்

ஜீர்ணமாகக் கூடியதல்ல பித்தம், ரக்தத்தைப் பற்றிய நோய், வாயு, எரிச்சல் ஆகியவற்றைப்போக்குகிறது. நோயற்ற நடுவயதை நிலை நிறுத்து கிறது.
—பாவபிரகாசம்

உள்ளிப் பூண்டின் குணம்—

स्निग्धोष्णतीक्ष्णः कटुपिच्छिलश्च गुरुः सरः स्वादुरसश्च बल्यः ।
वृष्यश्च मेधास्वरवर्णचक्षुर्भग्नास्थिसन्धानकरो रसोनः ॥

हृद्रोगजीर्णज्वरकुक्षिशूलविबन्धगुल्मारुचिकासशोफान् ।
दुर्नामकुष्ठानलसादजन्तुसमीरणश्वासकफांश्च हन्ति ॥ — सुश्रुतसंहिता

न पतन्ति स्तनाः स्त्रीणां नित्यं लशुनसेवनात् ।
न रूपं भ्रश्यते तासां न प्रजा न बलायुषी ॥

दृढमेधाविदीर्घायुर्दर्शनीयप्रजा भवेत् । — काश्यपसंहिता

உள்ளிப்பூண்டு—நெய்ப்புள்ளது, வெப்பத்தை உண்டாக்குகிறது. கடுமையானது. இனிப்பு, கார்ப்பு ஆகிய சுவைகளைக்கொண்டது. பிசுபிசுப்பு உடையது. எளிதில் ஜீர்ணமாகக் கூடியதல்ல. உடலில் பரவும் தன்மை உள்ளது. உடம்பைத் தேற்றுகிறது. ஆண்மையை வளர்க்கிறது. அறிவு, குரல், நிறம், கண் ஆகியவற்றிற்கு நன்மை செய்கிறது. முறிந்துபோன எலும்பை ஒட்டும்படிச் செய்கிறது. இதயநோய், நாட்பட்ட ஜ்வரம், வயிற்று வலி, மலச்சிக்கல், குல்மம் (வயிற்றிலுண்டாகும் ஒருவிதக்கட்டி), ருசியின்மை இருமல், வீக்கம், மூலம், குஷ்டம், பசித்தீக்குறைவு, வயிற்றி லுண்டாகும் பூச்சி, வாயு, இரைப்பு, கபம் ஆகியவற்றைப்போக்குகிறது.
— ஸுச்ருதஸம்ஹிதா

உள்ளிப்பூண்டை உட்கொள்வதால் பெண்களின் முலைகள் சரிவ தில்லை. அழகு, தனக்கு பிறந்தவர்களின், வலிமை ஆயுள் ஆகியவையும் சிதறுவதில்லை.

(உள்ளிப்பூண்டை உட்கொள்ளும் பெண்) வலு, அறிவு, நீண்ட ஆயுள், அழகு இவற்றுடன்கூடிய குழந்தைகளைப் பெற்றவளாக ஆகின்ருள்.
— காச்யபஸம்ஹிதா

வெள்வெங்காயத்தின் குணம் :—

श्लेष्मलो मारुतघ्नश्च पलाण्डुर्न च पित्तकृत् ।
आहारयोगी बल्यश्च गुरुर्वृष्योऽथ रोचनः ॥ — चरकसंहिता

कफवातार्शसां पथ्यः स्वेदेऽभ्यवहृतौ तथा । — अष्टाङ्गहृदयम्

வெள்வெங்காயம் - கபத்தை அதிகப்படுத்தும், வாயுவைக் கண்டிக்கிறது. பித்தத்தை கண்டிப்பதல்ல. உணவில் உபயோகிக்கத்தக்கது. உடலுக்கு வலுவைக்கொடுக்கிறது. எளிதில் ஜீர்ணமாகக்கூடியதல்ல. ஆண்மையை வளர்க்கிறது. உணவில் ருசியை உண்டாக்குகிறது.

— சரகஸம்ஹிதா

கபத்திலும், வாதத்திலும் உண்டாகிய மூலநோயில் ஒற்றடம் கொடுப்பதற்கும், உட்கொள்ளுவதற்கும் இதமானது — அஷ்டாங்கஹிருதயம்

வெங்காயத்தின் குணம் —

तीक्ष्णो गृञ्जनको ग्राही पित्तिनां हितकृन्न सः । — अष्टाङ्गहृदयम्

வெங்காயம் —கடுமையானது. இளகிப்போகும் மலத்தைக்கட்டும். பித்தசம்பந்தமான நோயுள்ளவர்களுக்கு நன்மை செய்யக்கூடியதல்ல.

— அஷ்டாங்கஹிருதயம்

தாமரை, அல்லி இவற்றின் கிழங்குகளின் குணம் —

शालूकं शीतलं वृष्यं पित्तदाहास्रनुद् गुरु ।
दुर्जरं स्वादुपाकं च स्तन्यानिलकफप्रदम् ॥

संग्राहि मधुरं रूक्षं … … … … … … । — भावप्रकाशः

தாமரை, அல்லி இவற்றின் கிழங்கு — குளிர்மையானது ஆண்மையைப் பெருக்கும். பித்தம், எரிச்சல், ரக்தத்தைப்பற்றியநோய் இவற்றைப் போக்கும். எளிதில் ஜீர்ணமாகாது ஜீர்ணமான பின்பு இனிப்புத்தன்மையை அடைவது, முலைப்பால், வாயு, கபம் ஆகியவற்றை வளர்க்கிறது. இளகிப் போகும் மலத்தைக்கட்டும் இயல்புடையது, இனிப்பானது, நெய்ப்பற்றது.

— பாவபிரகாசம்

நிலப்பனைக்கிழங்கின் குணம் —

वाराही पित्तला बल्या कटुवी तिक्ता रसायनी ।
आयुःशुक्राग्निकृन्मेहकफकुष्ठानिलापहा ॥ — भावप्रकाशः

நிலப்பனைக்கிழங்கு — பித்தத்தை அதிகப்படுத்தும். வலிமையை உண்டாக்கும். கார்ப்பு, கைப்பு ஆகிய சுவைகளுடையது. நோயற்ற

நடுவயதை நிலைநிறுத்தும், ஆயுள், விந்து, பசித்தீ, ஆகியவற்றை உண்டாக்கும். நீரிழிவு, கபம், குஷ்டம், வாயு இவற்றைப்போக்கும்.

— பாவபிரகாசம்

நீர்க்கோரைக்கிழங்கின் குணம் —

कसेरुकद्वयं शीतं मधुरं तुवरं गुरु ।

पित्तशोणितदाहघ्नं नयनामयनाशनम् ॥

ग्राहि शुक्रानिलश्लेष्मरुचिस्तन्यकरं स्मृतम् । — भावप्रकाशः

பெரிய நீர்க்கோரை, சிறிய நீர்க்கோரை ஆகிய இரண்டும் — குளிர்மையானது. இனிப்பு, துவர்ப்பு ஆகிய சுவைகளைக்கொண்டது. எளிதில் ஜீர்ணமாகக் கூடியதல்ல. பித்தம், ரக்தத்தைப்பற்றிய நோய், எரிச்சல், கண்நோய் ஆகியவற்றைப்போக்கும். இளகிப்போகும் மலத்தைக் கட்டும். விந்து, வாயு, கபம், உணவில் ருசி, முலைப்பால் ஆகியவற்றை வளர்க்கும். — பாவபிரகாசம்

நாய்க்கொடையின் குணம் —

सर्वे संस्वेदजाः शीता दोषलाः पिच्छिलाश्च ते ।

गुरवश्छर्द्यतीसारज्वरश्लेष्मामयप्रदाः ॥

श्वेताः शुचिस्थलीकाष्ठवंशगोमयसम्भवाः ।

नातिदोषकरास्ते स्युः शेषास्तेभ्यो विगर्हिताः ॥ — भावप्रकाशः

எல்லாவிதமான நாய்க்கொடைகள்— குளிர்மையானவை, வாயு, பித்தம், கபம் ஆகிய தோஷங்களைத் தூண்டுகின்றன. பிசுபிசுப்புடையவை. எளிதில் ஜீர்ணமாகக்கூடியதல்ல. வாந்தி, வயிற்றுப்போக்கு, ஜ்வரம், கப சம்பந்தமான நோய் ஆகியவற்றை உண்டாக்குகின்றன.

வெண்ணிறமுடையவையும்; சுத்தமான இடம், கட்டை, மூங்கில், பசுவின் சாணி ஆகியவற்றிலுண்டானவையுமான நாய்க்கொடைகள்— தோஷங்களை மிகவும் தூண்டுபவையல்ல. மற்றவை ஏற்றவையல்ல.

— பாவப்பிரகாசம்

காய்கறிகளை சமைப்பதில் இதமான முறை —

स्विन्नं निष्पीडितं शाकं हितं स्यात्स्नेहसंस्कृतम् । — सुश्रुतसंहिता

நன்ருக வேகவைக்கப்பட்டதும், நன்ருகப் பிழியப்பட்டதும், நெய் போன்ற நெய்ப்புப் பொருள்கள் சேர்த்துப் பக்குவம் செய்யப்பட்டதுமான காய்கறி இதமானது. — ஸுச்ருத ஸம்ஹிதா

உபயோகிக்கத்தகாத இலைக்கீரை—

कर्कशं परिजीर्णं च कृमिजुष्टमदेशजम् ।
वर्जयेत्पत्रशाकं तद्यदकालविरोहि च ॥ —सुश्रुतसंहिता

முற்றிப்போனதும், பழையதாகிவிட்டதும், பூச்சிப்பிடித்ததும், அசுத்தமான இடத்தில் பயிராகியதும், அததற்கேற்ற காலத்தைத் தவிர்த்து மற்ற காலத்தில் உண்டானதுமான இலைக்கீரைகளை உபயோகிக்கக்கூடாது.
—ஸுச்ருத ஸம்ஹிதா

புடலங்காய் முதலியவைவயும் இலைக்கீரை வகையைச் சேர்ந்தவை யாகும்.

உபயோகிக்கத்தகாத கிழங்கு—

बालं ह्यनार्तवं जीर्णं व्याधितं क्रिमिभक्षितम् ।
कन्दं विवर्जयेत्सर्वं यो वा सम्यङ् न रोहति ॥ —सुश्रुतसंहिता

संशुष्कं सकलं शाकं नाश्नीयान्मूलकं विना ॥ —भावप्रकाशः

மிகவும் இளசானதும், அதற்கேற்ற காலத்தைத் தவிர்த்து மற்ற காலத்தில் உண்டானதும், பழையதாகிவிட்டதும், நோயுற்றதும் பூச்சிப் பிடித்ததுமான கிழங்கை உபயோகிக்கக்கூடாது. அவ்வாறே முளைக்கும் சக்தியற்ற கிழங்கை உபயோகிக்கக்கூடாது. —ஸுச்ருத ஸம்ஹிதா

முள்ளங்கியைத்தவிர்த்து மற்ற எல்லா காய்கறிகளையும் காய்ந்து போனபிறகு உட்கொள்ளக்கூடாது. —பாவபிரகாசம்

முள்ளங்கி மட்டும் இளசானதுதான் சிறந்ததென்று "முள்ளங்கி யின் குணம்" என்னும் தலைப்பில் கூறப்பட்டுள்ளது.

இஞ்சியின் குணம்—

कफानिलहरं स्वर्यं विबन्धानाहशूलनुत् ।
कटूष्णं रोचनं हृद्यं वृष्यं चैवार्द्रकं स्मृतम् ॥ —सुश्रुतसंहिता

இஞ்சி—கபம், வாயு இவற்றைக் கண்டிக்கிறது. குரலுக்கு நன்மை செய்கிறது. மலச்சிக்கல், உப்புசம், வயிற்றுவலி ஆகியவற்றைப் போக்குகிறது. கார்ப்புச் சுவையுடையது. வெப்பத்தை உண்டாக்குகிறது. உணவில் ருசியை உண்டுபண்ணுகிறது. இதயத்திற்கு நலம் செய்கிறது. ஆண்மையை வளர்க்கிறது. —ஸுச்ருத ஸம்ஹிதா

சுக்குக்கும் — மேற்கூறப்பெற்ற குணங்கள் இருக்கின்றன.

மிளகின் குணம்—

मरिचं कटुकं तीक्ष्णं दीपनं कफवातजित् ।
उष्णं पित्तकरं रूक्षं श्वासशूलकृमीन् हरेत् ॥ —भावप्रकाशः

மிளகு — கார்ப்புச் சுவையுடையது. கடுமையானது. பசித்தீயைத் தூண்டுகிறது. கபம், வாயு ஆகியவற்றைக் கண்டிக்கும். வெப்பத்தை உண்டாக்கும். பித்தத்தை அதிகப்படுத்தும். நெய்ப்பற்றது. இழைப்பு, வயிற்றுவலி, வயிற்றிலுண்டாகும் பூச்சி ஆகியவற்றைப் போக்கும்.

—பாவபிரகாசம்

மூன்றுவித ஜீரகங்களின் குணம்—

जीरकत्रितयं रूक्षं कटूष्णं दीपनं लघु ।
संग्राहि पित्तलं मेध्यं गर्भाशयविशुद्धिकृत् ॥

ज्वरघ्नं पाचनं वृष्यं बल्यं रुच्यं कफापहम् ।
चक्षुष्यं पवनाध्मान गुल्मच्छर्द्यतिसारकृत् ॥ —भावप्रकाशः

ஜீரகம், கருஞ்ஜீரகம், பெரியஜீரகம் ஆகிய இம்மூன்றும் — நெய்ப்பற்றவை. கார்ப்புச் சுவையுடையவை வெப்பத்தையுண்டாக்குகின்றன. பசித்தீயைத் தூண்டுகின்றன. எளிதில் ஜீர்ணமாகும். இளகிப் போகும் மலத்தைக் கட்டுகிறது. பித்தத்தை அதிகப்படுத்துகிறது. அறிவை வளர்க்கின்றன. கருப்பையைச் சுத்தம் செய்கின்றன. ஜ்வரத்தைப் போக்குகின்றன. உணவை ஜீர்ணமாகும்படிச் செய்கின்றன. ஆண்மையை வளர்க்கின்றன. வலுவை உண்டாக்குகின்றன. உணவில் ருசியைத் தருகின்றன. கபத்தைக் கண்டிக்கின்றன. கண்ணுக்கு நலம் செய்கின்றன. வாயு, வயிற்றுப்பொருமல், குல்மம் (வயிற்றிலுண்டாகும் ஒருவிதக் கட்டி) வாந்தி, வயிற்றுப்போக்கு ஆகியவற்றைப் போக்குகின்றன. —பாவப்பிரகாசம்

வெந்தயத்தின் குணம்—

मेथिका वातशमनी श्लेष्मघ्नी ज्वरनाशिनी ।
ततः स्वल्पगुणा वन्या ... ... ॥ —भावप्रकाशः

मेथिका कटुरुष्णा च .... ।
अरोचकहरा दीप्तिकरी वातप्रणाशिनी ॥ —धन्वन्तरिनिघण्टुः

வெந்தயம் — வாயு, கபம் இவற்றைக் கண்டிக்கும். ஜ்வரத்தைப் போக்கும்.

காட்டு வெந்தயம் — வெந்தயத்தைவிட குறைந்த குணங்களைக் கொண்டது. —பாவபிரகாசம்

வெந்தயம் — கார்ப்புச் சுவையையுடையது. வெப்பத்தை உண்டு பண்ணும். ருசியின்மையைப் போக்கும். பசித்தீயைத் தூண்டும். வாயுவைக் கண்டிக்கும். —தன்வந்தரி நிகண்டு

தனியாவின் குணம்—

धान्यकं तुवरं स्निग्धमवृष्यं मूत्रलं लघु ।
तिक्तं कटूष्णवीर्यं च दीपनं पाचनं स्मृतम् ॥

ज्वरघ्नं रोचकं ग्राहि स्वादुपाकि त्रिदोषनुत् ।
तृष्णादाहवमिश्वासकासकार्श्यक्रिमिप्रणुत् ॥

आर्द्रं तु तद्गुणं स्वादु विशेषात्पित्तनाशनम् । —भावप्रकाशः

தனியா—துவர்ப்பு, கைப்பு, கார்ப்பு ஆகிய சுவைகளுள்ளது. நெய்ப்புடையது. ஆண்மையைக் குறைக்கிறது. மூத்திரத்தை அதிகப் படுத்துகிறது. எளிதில் ஜீர்ணமாகிறது. வெப்பத்தை உண்டாக்குகிறது. பசித்தீயைத் தூண்டுகிறது, உணவை ஜீர்ணமாகும்படி செய்கிறது. ஜ்வரத்தைப்போக்குகிறது. உணவில் ருசியை உண்டுபண்ணுகிறது. இளகிப் போகும் மலத்தைக் கட்டுகிறது. ஜீர்ணமானபின்பு இனிப்புத்தன்மையை அடைவது. வாயு, பித்தம், கபம் ஆகிய மூன்று தோஷங்களையும் கண்டிக்கிறது. விடாய், எரிச்சல், வாந்தி, இழைப்பு, இருமல், இளைப்பு, வயிற்றிலுண்டாகும் பூச்சி ஆகியவற்றைப் போக்குகிறது.

பச்சை தனியாவும் — இந்தக் குணங்களையே கொண்டது. விசேஷமாகப் பித்தத்தைக் கண்டிக்கும். —பாவபிரகாசம்

பெரிய ஓமத்தின் குணம்—

अजमोदा कटुस्तीक्ष्णा दीपनी कफवातनुत् ।
उष्णा विदाहिनी हृद्या वृष्या बलकरी लघुः ॥

नेत्रामयक्रिमिच्छर्दिहिक्कावस्तिरुजो हरेत् ॥ —भावप्रकाशः

பெரிய ஓமம் — கார்ப்புச் சுவையுள்ளது. கடுமையானது. பசித்தீயைத் தூண்டுகிறது. கபம், வாதம் ஆகியவற்றை கண்டிக்கிறது.

வெப்பத்தை உண்டாக்குகிறது. நெஞ்செரிவை உண்டுபண்ணுகிறது. இதயத்திற்கு நலம் செய்கிறது. ஆண்மையை வளர்க்கிறது. வலிமையை தருகிறது. எளிதில் ஜீர்ணமாகும். கண் நோய், வயிற்றிலுண்டாகும் பூச்சி, வாந்தி, விக்கல், மூத்திரப்பை வலி ஆகியவற்றைப் போக்குகிறது.
—பாவபிரகாசம்

சிறிய ஓமத்தின் குணம்—

यवानी पाचनी रुच्या तीक्ष्णोष्णा कटुका लघुः ।
दीपनी च तथा तिक्ता पित्तला शुक्रशूलहृत् ॥

वातश्लेष्मोदरानाहगुल्मप्लीहकृमिप्रणुत् । — भावप्रकाशः

சிறிய ஓமம்—உணவை ஜீர்ணமாகும்படிச் செய்கிறது. உணவில் ருசியை உண்டாக்குகிறது. கடுமையானது. வெப்பத்தை உண்டுபண்ணு கிறது. கார்ப்பு, கைப்பு ஆகியவைகளைக் கொண்டது. எளிதில் ஜீர்ண மாகக்கூடியது. பசித்தீயைத் தூண்டுகிறது. பித்தத்தை அதிகரிக்கிறது. விந்து, வயிற்றுவலி, வாயு, கபம், உதரம் (வயிற்றிலுண்டாகும் ஒருவித வீக்கம்), உப்புசம், குல்மம் (வயிற்றிலுண்டாகும் ஒருவிதக் கட்டி), மண்ணீரல் நோய், வயிற்றிலுண்டாகும் பூச்சி ஆகியவற்றைப் போக்குகிறது —பாவபிரகாசம்

பெருங்காயத்தின் குணம்—

लघूष्णं पाचनं हिङ्गु दीपनं कफवातजित् ।
कटु स्निग्धं सरं तीक्ष्णं शूलाजीर्णविबन्धनुत् ॥ — सुश्रुतसंहिता

शूलगुल्मोदरानाहकृमिघ्नं पित्तवर्धनम् ॥ — भावप्रकाशः

பெருங்காயம் எளிதில் ஜீர்ணமாகக்கூடியது. வெப்பத்தை உண்டாக்கும். உணவை ஜீர்ணமாகும்படி செய்யும். பசித்தீயைத் தூண்டும். கபம், வாதம் ஆகியவற்றைப் போக்கும். கார்ப்புச் சுவையுள்ளது. நெய்ப்புடையது. மலத்தை வெளியேற்றும் தன்மையுள்ளது. கடுமையானது வயிற்றுவலி, அஜீர்ணம், மலச்சிக்கல் ஆகியவற்றைப் போக்குகிறது.
—ஸுச்ருசஸம்ஹிதா

குல்மம் (வயிற்றிலுண்டாகும் ஒருவித கட்டி) உப்புசம், வயிற்றில் உண்டாகும் பூச்சி ஆகியவற்றைப் போக்கும். பித்தத்தை அதிகப்படுத்தும்.
—பாவபிரகாசம்

இந்துப்பின் குணம்—

चक्षुष्यं सैन्धवं हृद्यं रुच्यं लघ्वग्निदीपनम् ।
स्निग्धं समधुरं वृष्यं शीतं दोषघ्नमुत्तमम् ॥ —सुश्रुतसंहिता

இந்துப்பு—கண்ணுக்கும், இதயத்திற்கும் நன்மை செய்கிறது. உணவில் ருசியை உண்டாக்குகிறது. எளிதில் ஜீர்ணமாகக் கூடியது. பசித்தீயைத் தூண்டுகிறது. நெய்ப்புடையது. இனிப்புச் சுவையுடன் கூடியது. ஆண்மையை வளர்க்கிறது. குளிர்மையானது. வாயு, பித்தம், கபம் ஆகிய தோஷங்களை குறைக்கிறது. உப்புகளில் சிறந்தது.

—ஸுச்ருத ஸம்ஹிதா

கடலுப்பின் குணம் —

सामुद्रं मधुरं पाके सतिक्तं मधुरं गुरु ।
नात्युष्णं दीपनं भेदि सक्षारमविदाहि च ।
श्लेष्मलं वातनुत्तीक्ष्णमरूक्षं नातिशीतलम् ॥ —भावप्रकाशः

கடலுப்பு — சிறிது கைப்புச்சுவையும், கார்ப்புச்சுவையும் கூடிய இனிப்புச்சுவையை உடையது. ஜீர்ணமான பின்பு இனிப்புத்தன்மையை அடைவது எளிதில் ஜீர்ணமாகாது. வெப்பத்தை அதிகமாக உண்டாக்காது. பசித்தீயைத் தூண்டுகிறது. மலத்தை வெளியேற்றுகிறது. நெஞ்செரிவை உண்டுபண்ணுவதல்ல. கபத்தை அதிகப்படுத்தும். வாயுவை கண்டிக்கிறது. கடுமையானது. வறண்டதல்ல. மிகவும் குளிர்மையானதல்ல.

—பாவபிரகாசம்

வெல்லத்தின் குணம் —

गुडो वृष्यो गुरुः स्निग्धो वातघ्नो मूत्रशोधनः ।
नातिपित्तहरो मेदःकफक्रिमिबलप्रदः ॥

गुडो जीर्णो लघुः पथ्योऽनभिष्यन्द्यग्निपुष्टिकृत् ।
पित्तघ्नो मधुरो वृष्यो वातघ्नोऽसृक्प्रसादनः ॥

गुडो नवः कफश्वासकासक्रिमिकरोऽग्निकृत् । —भावप्रकाशः

வெல்லம்—ஆண்மையை வளர்க்கிறது. எளிதில் ஜீர்ணமாகக் கூடியதல்ல. நெய்ப்புடையது. வாயுவை கண்டிக்கிறது. மூத்திரத்தை சோதிக்கிறது. பித்தத்தை அவ்வளவாக கண்டிப்பதல்ல, கொழுப்பு, கபம், கிருமி, வலிமை இவற்றை உண்டாக்குகிறது.

பழையவெல்லம் — எளிதில் ஜீர்ணமாகக்கூடியது, இதமானது கபத்தை இளக்கக்கூடியதல்ல. பசித்தீயைத் தூண்டுகிறது. வலுவை உண்டு பண்ணுகிறது. பித்தத்தை கண்டிக்கிறது. இனிப்பானது. ஆண்மையை வளர்க்கிறது. வாயுவைக் கண்டிக்கிறது. ரக்தத்தை தெளிவுறுத்துகிறது.

புதியவெல்லம்—கபம், இழைப்பு, இருமல், கிருமி இவற்றை உண்டாக்குகிறது. பசித்தீயைத் தூண்டுகிறது. — பாவபிரகாசம்

கற்கண்டுவின் குணம் —

खण्डन्तु मधुरं वृष्यं चक्षुष्यं बृंहणं हिमम् ।
वातपित्तहरं स्निग्धं बल्यं वान्तिहरं परम् ॥ —भावप्रकाशः

கற்கண்டு—இனிப்பானது. ஆண்மையை பெருக்கும். கண்ணுக்கு நலம் செய்யும், உடம்பைத் தேற்றும். குளிர்மையானது. வாயு, பித்தம் ஆகியவற்றைக் கண்டிக்கும். நெய்ப்புடையது, வலுவை உண்டாக்குகிறது, வாந்தியை போக்குவதில் சிறந்தது. — பாவபிரகாசம்

சர்க்கரையின் குணம் —

सिता सुमधुरा रुच्या वातपित्तास्रदाहजित् ।
मूर्छाच्छर्दिज्वरान् हन्ति सुशीता शुक्रकारिणी ॥ —भावप्रकाशः

சர்க்கரை—இனிப்புச் சுவையுடையது. வாயு, பித்தம், ரக்தத்தைப் பற்றிய நோய், எரிச்சல், மயக்கம், வாந்தி, ஜ்வரம் ஆகியவற்றைப் போக்குகிறது. குளிர்மையானது விந்துவை வளர்க்கிறது. — பாவபிரகாசம்

தேன் சர்க்கரையின் குணம் —

मधुजा शर्करा रूक्षा कफपित्तहरा गुरुः ।
छर्द्यतीसारतृड्दाहरक्तहृत्तुवरा हिमा ॥ —भावप्रकाशः

தேன் சர்க்கரை — வரட்சியானது. கபம், பித்தம் இவற்றைக் கண்டிக்கும். எளிதில் ஜீர்ணமாகக்கூடியதல்ல. வாந்தி, வயிற்றுப்போக்கு விடாய், எரிச்சல், ரக்தத்தைப்பற்றிய நோய் ஆகியவற்றைப் போக்குகிறது. துவர்ப்புச் சுவையுடையது. குளிர்மையானது. —பாவபிரகாசம்

முற்றும்.

*குருக்ஷேத்திர மாலை

காப்பு

மன்னவர்கள் தன்மர் வனவாசத் தேயிருந்து
நன்னெறிசேர் குருக்ஷேத்திரன் நாரணற்குச் செய்தகுற்றம்
அன்னதரு வானதன்மர் அருச்சுனனுர் காத்தபுகழ்
கன்னல் [1] புகல் கணபதியே காப்பு.

கடவுள் வாழ்த்து

கற்றான் திருமகனே காரானை மேனியனே
சத்திக் கணபதியே சண்முகற்கு மூத்தோனே
வள்ளி மடமயிலாள் மாறுட்டம் பேசினதை
தெள்ளியதோர் வேலவற்குச் சேர்ந்த விநாயகரே.

மைகடலில் மாயவர்க்கு மருமகனுய் வந்தோனே
கைக்கடங் காத கனியமிர்தங் கொண்டோனே
சுத்தமுள்ள சுந்தரிதான் தொத்தமுடன் பெத்தெடுத்த
வித்தகமாய் மன்மதற்கு வேண்டுமக னுகவந்தோன்
குருக்ஷேத்திரன் மாலை கோலமுடன் யான்பாட
விருப்பமுடன் வந்து விநாயகரே முன்னடவீர்.

அவையடக்கம்

மருப்பான வெள்ளிமலை யிருக்கும் ஈசுரனுர்
திருப்பாதந் தெண்டனிட்டுப் போகையிலே மாயவற்கு
என்னை யறியாமல் இடுக்கம்வந்த ஞாயமதை
தன்னை யறியாமல் தான்வந்த குற்றமதை
நன்மையுள்ள ஈசுவரரும் நான்முகனுங் காராத
அன்னைதரு வானதன்மர் அருச்சுனனுர் காத்தபுகழ்
புன்மையுடன் யான்பாட புலவீர் பொறுத்தருள்வீர்.

கதைச்சுருக்கம்

ஞானமது சிறந்த நல்லகுரு க்ஷேத்திரனுர்
வேதக் கொழுந்தெனவே விளங்குங்குரு க்ஷேத்திரனுர்

---

* M. 344/D. 628.   1. புகள் என்றுள்ளது.

தான முடனே சருவே சுரன் பாதம்
நித்தமவன் தப்பாமல் நிஷ்டையுடன் பூசைபண்ணி
சித்த மகிழ்ந்துநிதம் சிவன்பதத்தைப் பூசைபண்ணி
மெத்தெனவே பூந்தேரில் விசமுட னேறியவன்
பல்லியங்கள் பாடப் பலவிருது தான்முழங்க
நல்லதொரு சங்கீத நாதசின்ன மூதிவர
வல்லதொரு வீணைசர மண்டலங்க ளேமுழங்க
செல்லக்குரு க்ஷேத்திரனார் தேரேறிப் போகையிலே
வண்ணமுள்ள மாயவனார் மகாதேவ ரைநோக்கி
கண்ணர் மனமகிழ்ந்து கடுந்தவசு செய்திருந்தார்.
நன்னெறிசேர் ஞானமுடன் நாரணனார் நிற்கையிலே
வாகாக வேதான் மரகதத்தைப் பார்க்கவென்று
ஆகாசத் தேர்மே லிருந்து மரகதத்தை
தன்னை யறியாமல் தானுமிழந்தான் பூமியிலே
இதுசமய மென்று ஏற்றமுள்ள வாயுவவன்
சூரு வளிப்போலே சுழற்றி மரகதத்தை
கோனாகி நின்ற குலவண்ணன் தன்கரத்தில்
ஆயன் முகுந்தர் அச்சுதனார் தன்கையில்
சென்றுவிழத் தள்ளிவிட திடுக்கிட் டவரேங்கி
என்று மனதிலெண்ணி ஏங்கிவிழி நீர்சொரிய
என்செய்வே னிவ்விதிக்கு ஏற்றமுள்ள ஈசுவரரே
முன்செய்த தீவினையோ முக்கண்ணே யென்றுசொன்னார்.

குருக்ஷேத்திரன் நிலையுணர்ந்து வேண்டல்

அந்த வயனம் அறிந்துகுரு க்ஷேத்திரனும்
ஆதி சிவனே அரனே யெனப்புலம்பி
சேதி தனையறிந்து சிவசிவா வென்றழுது
தந்தியுடன் மாயவனார் சங்கரிக்கு முன்னமேதான்
எந்தனுயிர் காப்பார் யாவரென்று தானினைந்து
இயல்செரு மாயவனார் எதிராளி நான்முகனை
வரைசேர்ந்த நம்வினையை வாராமல் காருமென்று
அந்நேரம் மாறன்மகன் அரைநொடிக்கு முன்னேதான்
சென்று பிரமனடி சீர்பாதந் தெண்டனிட்டு
ஈரே ழுலகம் இனிதாய்ப் படைத்தோனே
ஆயிரம் வேதம் அரைநொடியில் கற்றோனே
அன்று கடலை அடைத்தோ னவன்தனக்கு

இன்று ஒருபிழைதா னென்றால் அறியாமல்
வந்ததுகாண் நான்முகனே மாயவனு ரென்னுயிரை
கொன்றுவி டாதபடி கொற்றவனே காருமென்றான்
முந்தப் படைத்தவனி முட்டமுடி போகயென்னை
இந்தத் தறுவாய்க்கு யெனைக்காக்க வேண்டுமென்றான்.

குருக்ஷேத்திரனுக்கு நான்முகன் அறிவுரை

அப்போது வேதியனும் அவர்கலங்கி யென்சொல்வார்
செப்பமுடன் காக்கில் சிவன்காப்பா ரல்லாமல்
மற்றொருவர் காக்க வகையேதுங் கூடாது
ஏற்றமுள்ள நான்முகனும் எனக்குமுடி யாதெனவே
வந்தகுரு க்ஷேத்திரனை வாவென் றருகழைத்து
எந்த வகையாலு முனக்கிடறு வருகாது
வெந்தழலாய் மாயவற்கு வெகுகுற்ற மாயிருக்கும்
சுந்தரியா ள் தன்மகனே தோற்றமுள்ள க்ஷேத்திரனே
நம்மா லுனைகாக்க நல்காது கண்டாயே.

குருக்ஷேத்திரன் எமனை அணுகுதல்

இந்தவச னங்கேட்டு ஏற்றமுள்ள க்ஷேத்திரனார்
எந்தனுக்கு இன்று எழுத்துமுடி வென்றுசொல்லி
புத்திநொந்து தானலைந்து போகுமிட மேதெனவே
இந்த உலகுதன்னில் எமனல்லோ கொல்லுறவன்
மைப்போது க்ஷேத்திரனும் [1] மாமறலி தன்னடியில்
செப்பமதாய்ச் சென்று சேவடியைப் பூண்டுகொண்டான்.
என்னுடைய பங்கி லிருக்கு மியமதன்மர்
சொன்னவண்ண மாயவற்கு தோஷமது செய்துவந்தோம்
தேவரீர் பாதமதில் சேர்ந்தே னினியுமக்கு
ஏவலாய் நான்திரிய என்னைநீர் காருமென்றான்.
ஆவதுபோல் என்னுயிரை அஞ்சாமல் காருமென்றான்.

எமதன்மர் யோசனை

அன்று எமதன்மர் ஆனதிஷ்ட்டி நாட்டமதை
நன்றியுடன் காக்கில் நான்காக்கக் கூடாது
வாரா யெனவழைத்து வாய்த்தகுரு க்ஷேத்திரனை

---

1. மறலி = நமன்

சீரான மாயவற்குச் செய்தகுற்றம் பாராமல்
என்னையுங் கொல்வான் எரிப்பானொரு நாழிகையில்
மன்னவனே நீர்தாம் மகாதேவர் தன்னடியில்
சென்று விழுந்தால் சிவன்காப்பா னல்லாது
மன்றிலுள்ள தேவர்களும் வானவருங் காப்பதுதான்
வானத் திடிவிழுந்தால் வைக்கோல்போர் தாங்கிடுமோ
கானமலை விழுந்தால் கைக்குடையோ தாங்குவது
ஆனை நிகரொக்கும் அடைந்தவுன்னைக் காப்பிதென்றான்.

சிவபெருமானிடம் செல்லல்

வெள்ளிமலை ஈசுபரனார் மீதடியில் போய்விழுந்தான்
ஒள்ளியதோ ருந்தனுக்கு உண்மையாய் நானுரைத்தார்
போகா யெனவுரைத்தான் புதுமையுள்ள மாமறலி
மார்புறவே தானு மண்ணின்மே லேவிழுந்தான்
கார்சடையில் கங்கை யணிந்தவரே போற்றியென்றான்
செவ்வலரிக் காயில் சிறந்தவரே போற்றியென்றான்
வல்லமா காளியுடன் வாதாடி போற்றியென்றான்
தில்லைவனத்தில் திறந்தாடி போற்றியென்றான்
ஏகவஸ்துவான ஈசுவரே போற்றியென்றான்
முன்னாளில் தேவர் முனிவர்களுந் தான்பிழைக்க
அன்றால முண்டதுபோல் அடியே னுயிர்பிழைக்க
இன்றுதான் காத்தருளு ஏற்றமுள்ள ஈசுவரரே
மண்ணையுண்ட மாயவற்கு வலுகுற்றஞ் செய்துவந்தேன்
கண்ணப்பர் வேடனை காத்ததுபோல் காருமென்றான்
மெத்த மனமகிழ்ந்து விரிசடையா போற்றியென்றான்.

சிவன் கூற்று

சற்றே நகைத்தவருந் தாமுறவே யெண்ணியவர்
அத்திகிரி நாதர் அவர்முகம்பார்த் தேவுரைப்பார்
மார்க்கண்ட னுக்காக மாமறலி தன்னை அன்று
இறக்க உதைத்தவனு மிறந்து விட்டான் கண்டாயே
உன்னைநான் வைத்திருந்தா லொருநொடியில் மாயவரும்
கோபமதா யுன்னைக் கொடுஞ்சக்தி னுல்வதைப்பார்
சாப மிடுவோஞ் சபித்திடுவோம் நாமவரை
அப்போ திறப்பார் அவனியுள்ளோர் தான்கெடுவார்
இப்பாரில் தேவர்களு மிரிஷிகளுந் தானிறப்பார்

முப்புரத்தை நாம்நகைத்து முடுகிவரும் வேளையிலே
வேகமுடன் மாயவனுர் வெள்விடைய தாகவந்து
நம்மையவர் தாங்கினர்காண் நாராயணர் நமக்கு
இம்மைதனில் மைத்துனனு மினிதிருப்பா ரம்மானே.
ஆனதொரு மாயவற்கு அபராதஞ் செய்துவந்தாய்
ஞாயமது சொன்னேம் நம்மிடமேல் குற்றமில்லை.

சிவனிடம் ஆலோசனை வேண்டல்

என்றுரைத்த போதே ஏங்கிக்குரு க்ஷேத்திரனும்
நன்றியுள்ள ஈசுவரனே நாரணற்குச் செய்தகுற்றம்
தேவரீர் காக்கத் திருவுளமே அல்லாது
பூவுலகி லார்காற்பார் போற்றிய ஈசுரரே

சிவபிரான் கூறிய யோசனை

நாவுலகில் பஞ்சவர்கள் நாடாண்டு காடுறைந்து
தேவேந் திரனுர்க்குத் திறமான பிள்ளையவர்
மாவேந்த னுன அருச்சுனனுர் மாயவற்கு
மைத்துனனு மானவன்காண் வார்த்தையொன் றுரைப்பான்காண்
பத்தியுடன் காப்பான் பரிந்தோடி யவ்வனத்தில்
வில்தொழிற்கு நல்ல மிகுத்ததொரு சேவகன்காண்
பொறுமை யுடையான்காண் போந்தாரைக் காப்பான்காண்
சிறுமை யுடையான்காண் சேர்ந்தார்க் கினியவன்காண்
ஆகிலும்நாம் சொல்லுகிறோம் அருச்சுனனுர் தன்னுடனே
போகிலும் நீயங்கே போகடுக வென்றுரைத்தார்.

குருக்ஷேத்திரன் அருச்சுனனையடைந்து முறையிடல்

அப்போ குருக்ஷேத்திரனும் ஆனதொரு ஈசுபரனை
செப்பமுடன் தெண்டனிட்டுத் திரும்பியே ஓடலுற்றுன்.
நாடியவன் போகையிலே நல்ல அருச்சுனனும்
தேடியதேர் வேட்டைபோய்த் திரும்பி வருகையிலே
சென்றவர் தான் தெண்டனிட்டு சீர்பாதம் பூண்டுகொண்டு
நன்றியுடன் வந்தகுறை நானறியச் சொல்லு மென்றுர்
நான்வந்த காரியந்தான் நன்றியுடன் சொல்லுகிறேன்
தானடந்து என்னுயிரைத் தப்பாமல் காப்பனென்று
வாகா யருச்சுனரே வார்த்தையரு ளென்றுரைத்தார்.

வாக்குப் பிசகாமல் வார்த்தையரு ளென்றுரைத்தார்.
ஆகாசம் பூமி அறியவுரை அருச்சுனரே
தருமக் குலக்கொழுந்தே தருமகுல சேகரனே
ஆதரவு சொல்லி அடைந்தவரைக் காருமையா !

அருச்சுனன் அபயமளித்தல்

அப்போ தருச்சுனனும் ஐயன் திருவாணை
செப்பமுள்ள வெள்விடையோன் சிவனார் திருவாணை
ஆகாசம் பூமி அழகு கதிராணை
ஆயன் வரிலும் அரியசிவ னார்வரிலும்
ஞாயமுள்ள தேவர்களும் நரப்புவியோர் வந்தாலும்
காப்பேன்நா னென்றுரைத்துக் கைபோட்டுத் தான்கொடுத்தான்
தீர்க்கமுடன் சொல்லி செப்பிடர் வந்ததெல்லாம்
அவன்தாகந் தெளிந்து தன்மபக்கந் தான்தீர்ந்து
அவன்சோபந் தெளிந்து சோதிமுகம் வேர்துடைத்து
வாகுடைய க்ஷேத்திரனே வந்தகுற்றஞ் சொல்லுமென்றான்.

குருக்ஷேத்திரன் நிகழ்ந்தவை கூறல்

ஆண்டவனார் பேரிருக்கும் அசையா விசையாகேள்
தாண்டவமா டுஞ்சிவனார் தன்னடியில் பூசைபண்ணி
பாவையர்கள் சூழப் பரிவான தேரேறி
ஆவலுடன் போகையிலே ஆயன் தவசிருந்தார்
பூவுலகைப் பாராமல் போட்டேன் மரகதத்தை
நாவுலகில் தவசு பண்ணும் நாராயணர் கரத்தில்
நாராயணன் கரத்தில் நன்றாய் விழுந்ததுவே
வாராத துக்கமெல்லாம் வந்தடைந்த தென்றுசொல்லி
தான்புலம்பி நானுங் சங்கரிப்பா ரென்றுசொல்லி
நான்முகனார் தம்மிடத்தில் போனா ரவர்தாமும்
தம்மாலே காக்கத் தறியாது யென்றுரைத்தார்
மன்றியே நானோடி மாமறலித் தன்னடியில்
தெண்டனிட்டுச் சீர்பாதஞ் சென்னியின்மேல் பூண்டுகொண்டேன்
ஆன உயிர்கொல்லும் அழகுதர்ம ராசாவே
தானெடுத்து யென்னுயிரைச் சாத்திரத்தி லல்பார்த்து
ஈசனெழிய யெங்களால் காப்பது தான்
நேசமுள்ள போர்புவிமுன் நேராடி னிறப்பதொக்கும்
தன்றி யுரைத்தான்காண் காரிஎமன் தன்னைவிட்டு

நன்றியுட னேவிசையா நல்லதொரு மேருவினில்
முக்கண் ணுடையார் மூர்த்தி தவமிருந்தார்
அக்கணமே சென்று அரனடியைச் சேர்வைபண்ணி
போற்றியிரு கைதொழுது பூமியிலே தான்விழுந்து
ஆத்திகொன்றை சூடினவ ரானகுரு .சேத்திரனை
மெத்த மனமகிழ்ந்து மேலான ஈசுபரரும்
குற்றமது செய்துவந்த கொள்கையது சொல்லியபின்
திகழான ஈசுபரருந் திருமாலு னைத்தேடி
சதியாக உன்னையவர் சக்கரத்தி னல்வதைப்பார்
நான்தடுக்கக் கேளார் நல்லதொரு மாயவரும்
தான்கோப மாகச் சபித்திடுவோம் நாமவரை
அப்போ திறப்பார் அவனியுள்ளோர் தான்கெடுவார்
இப்பாரில் தேவர்களு மிருஷிகளுந் தானிறப்பார்
மெத்தமனத் தாபமதாய் மேலுலகுங் கீழுலகும்
கோத்துக் குலைந்து [1] குவலயமுந் தான்கெடுமே
என்றுசொல்லி ஈசுபரரும் ஏற்றமுள்ள தன்மர்தம்பி
முன்றில் விசையன் முசியாமல் காப்பனென்றே
உள்ளமகிழ்ந் தீசுபரனுர் உமதிடத்தி லேவினர்காண்
வெள்ளமது வாராப்போல் விசையரென் றேடிவந்தேன்
தேவரீர் பாதமதில் சேர்ந்தே னினியுமக்கு
ஏவலாய் நான்திரிவேன் என்னையும்நீர் காருமென்ருன்.

அருச்சுனன் உரை

வில்லி யரிச்சுனனும் மிகவழன்றுங் கேதுரைப்பார்
நல்லதொரு தேவர்களும் நான்முகனுங் காராத
வல்லவர்கள் காராத மடிக்குழந்தை னுயடியேன்
பேசறியேன் சத்துமொரு பொருளறியா நாயடியேன்
சண்டை முகந்தனையே சமத்தறியா நாயடியேன்
வில்சமத்துங் கைச்சமத்தும் விருதறியா நாயடியேன்
பேசறிவா னென்றென்னைப் பெருமையுடன் சொன்னுரோ
ஏகபர்வ சித்துவுன்னை ஏவினரோ என்னிடத்தில்
அவ்வார்த்தைக் கேட்டோ அடியனிடந் தேடிவந்தாய்
மெய்வாய்த்த மாயவற்கு வலுதுர்க்கஞ் செய்துவந்தாய்
ஆயர் தமக்கு அவக்கேடு செய்துவந்தாய்
ஆராய்ந்து பாராமல் ஆமென் றுரைத்துவிட்டேன்

1 குலவனுர்கள் என்றுள்ளது.

திரியோதி ரனுமக்குச் செய்த வினைகளெல்லாம்
அரியோடுங் கானகத்தை ஐவருந்தா னுங்களிங்கே
குருநாடு விட்டுக் குறியாவ னத்தில்வந்தோம்
மருவாரு மாயவனுர் வாய்த்ததுணை என்றிருந்தோம்
நாங்க ளிருக்கிறது நம்மாணை நிச்சயங்காண்
தீங்குவரு முன்னுலத் திரியோதி ரனுலே
கல்லைப்பெண் ணுக்கிவைத்த கார்வண்ணன் தன்னருளால்
மல்லைப் புவியிலுந்தான் மாள்வது நிச்சயங்காண்
என்செய்வே னிவ்விதிக்கு ஏற்றமுள்ள ஈசுபரரே
வன்செய்த மாயவற்கு வார்த்தைப் பிழையுரைத்தேன்
எப்போதும் நாம்தா னிறப்பதுவுந் திண்ணமல்லோ
தப்பாத சொல்லுடையான் தன்மர் குலமலவோ
இச்சையுடன் மாயன் இயல்கருடன் வந்தாலும்
வாசமுடன் பொருதி மாள்வது நிச்சயங்காண்
இந்த மொழியுரைத்து இடக்கூறு பேசினவர்
தன்னைவேண் டாதவனைத் தழுவினவா கொக்குமென்ருர்.

அநச்சுனன், குருக்ஷேத்திரன் இருவரும் தருமனிடம் சென்றுரைத்தல்

மன்னவனுர் தன்மருட வாக்கறிய நாம்போக
குன்றனைய தோளான் குருக்ஷேத்தி ரன்தனையும்
வெம்பி அருச்சுனனும் மிகமகிழ்ந்து ஆண்மை சொல்லி
சென்றுதிருத் தன்மருட சீர்பாதந் தெண்டனிட்டார்
நின்று குருக்ஷேத்திரனை நேராகத் தானிறுத்தி
கைக்குவித்து நின்ருன் கலக்கமுடன் க்ஷேத்திரனும்
நின்றதொரு க்ஷேத்திரனை நிலைபெரிய தன்மர்கண்டு
ஏன் வந்தாய் மன்மதற்கு ஏற்றமுள்ள புத்திரனே
வன்புகழும் நல்ல மகீப னருச்சுனனும்
நம்முடைய மாயவனுர் நாராயணர் தமக்கு
தம்மை யறியாமல் தான்வந்த குற்றமதை
வேதா விதியன் மிகவும்நல்ல மாமறவி
நாதரொளி ஈசுபரனுர் நாரணற்குச் செய்தகுற்றம்
வந்ததொரு தீவினையை மாற்ற வேணுமென்று தென்றுசொல்லி
சுந்தமுள்ள மேருவினில் காருலையும் ஈசுபரனுர்
ஆன [1]புகழ் தன்மர் தம்பி அருச்சுனரைக் காப்பரென்று
சுற்றமுள்ள க்ஷேத்திரற்கு சொன்னவுட னிங்குவந்து

1. புகள் என்றுள்ளது.

மெத்தவலு வாயானும் வேட்டைபோய் கானகத்தில்
திரும்பி வருகையிலே தேடியவ னோடிவந்து
பருப்பவள வாயும் பருமுத்துப் பல்லொளிவும்
வெம்பியவன் தானும் மெய்யுறவே தாள்வணங்கி
தன்மர்க் கபயமென்று தாளிணையைப் பூண்டுகொண்டான்.
அப்போ தடியேன் அரனை நினைந்துகொண்டு
உம்பர் வரிலும் உலகளந்தான் தான்வரிலும்
தம்பிநுன் காப்பனென்று தப்பாமல் கைபோட்டேன்.

தருமன் கூற்று

வந்தவகை காண்டா வனமெரித்தான் சொல்லியபின்
எந்தவகை யண்ணாவி யென்றுரைக்கத் தம்பியுந்தான்
கர்த்தன் செயலொழிந்து காண்டா வனமெரித்தான்
சித்தந் தனிலேற்கச் செயலுண்டோ தம்பியரே
முன்னறிவும் பின்னறிவும் முதலறிவுந் தானறிந்தால்
செம்மையுட னுமுஞ் சிவனடிமை தானல்லவோ
பொம்மைசெறு தம்பியரே புகழுமக்குத் தானேது
ஆதரவாய் நம்மை அடைந்தவனுக் காகவுந்தான்
நீதியுட னிருந்தால் நிகருண்டோ தம்பியரே
பள்ளிகொள்வா ராலும் பரமனு ராலும்
தெள்ளியதோ ரிவருந்தான் செவிடுபடத் தான்பொருதி
வாராளி மாயவனுர் மகாதேவர் கையாலே
யேரார் தமக்காக இறந்தாலு மீடேற்றம்
மன்றி லெவர்தமக்கும் வார்த்தைப் பிழையுரைத்தால்
குன்றுசெறு ஈசுரற்கு குற்றமது தானல்லவோ
ஆதிபர மேசுரற்கு அய்யர்தமக் கேராது
ஆகிலும்நாம் பஞ்சவர்கள் அபயமிட்டு வந்தவரை
போகிலென்று சொல்வதுதான் புகழோ வெனவுரைத்தார்.
அஞ்சாத நெஞ்சுடைய அருச்சுன நீகேளு!
எப்போதும் நாம்தான் இறப்பதுவே நிச்சயங்காண்.
தப்பாமல் சொர்க்கமது தான்கிடைக்குந் தம்பியரே
என்று மனதிலெண்ணி இளையவற்குப் புத்திசொல்லி

அருச்சுனன் மகிழ்ச்சி

அன்றுதன்மர் சொல்கேட்டு அருச்சுனருந் தான்மகிழ்ந்து
பூரித் துடலமெங்கும் புளகிதங்கள் தானுகி

ஈசன் வரிலும் எமதன்மர் தான்வரிலும்
கூசாமல் சற்றுங் குறைவறவே தான்பொருது
ஆசார மானதொரு ஐவருந்தான் பட்டமென்ருல்
ஒக்க இறந்தாலும் உனக்கதினல் சேதமுண்டோ
தக்ககுரு க்ஷேத்திரற்குத் தானுரைத்து அருச்சுனரும்
மெத்தனவே யெண்ணியவர் மேம்பாடு தானுரைத்து
சித்தங் கலங்காமல் சிறந்திருந்தா ரம்மானே !

மாயன் மரகதத்தைக் கண்டு சினமடைதல்

சீராளி மாயவனுர் சிவஜபங்கள் முடித்ததற்பின்
நேரான கையில் நிறைந்த மரகதத்தை
கண்டந்த மாயவனுர் கண்க ளெரியெழவே
திண்டுமுண்டு செய்தவனை சிந்தைதனி லேநினைந்து
வாகு பொருத தன்மகுரு க்ஷேத்திரனை
போகுமிடங்க ளெல்லாம் புந்திதனி லேநினைந்து
தாபரித்தா ரெவ்விடமோ தற்காத்தா ரெவ்விடமோ
தீர்க்கமதாய்ப் பார்க்கில் சிறப்புடைய போர்பிரமன்
குன்றுசெறு ஈசுவரனுர் கொத்தவனுர் தம்மிடத்தில்
வென்றியுடன் போனதுவும் மிக்கவர்கள் சொன்னதுவும்
மீண்டுவந்து தர்மர் விசைய னிலக்காக
பாண்டவர்கள் தஞ்சமென்று பரிந்தவர்கள் சொன்னதுவும்
வந்தவகை யெல்லாம் வகைவகையாய் மாயவரும்
சிந்தையனல் மூழ்கி சிறக்கவெங்குந் தான்பார்த்து
அண்டர்க்கதிபதி யானவர்கோன் தானுமல்ல
மூன்றுலகு மாளுகின்ற (முப்பத்து)முக்கோடி தேவரல்ல
வேதப் பொருளான விதிபிரமன் தானுமல்ல
நாதர்தம்மைத் தாங்கின்ற நந்தீசர் தானுமல்ல
பாசுபதக் காறண பாரியெமன் தானுமல்ல
வாசம் பொருத மகாதேவர் தானுமல்ல
காளி யுடனடித்த காளகண்டர் தானுமல்ல
ஆலால முண்டதொரு ஆதிபாவ ஸத்துவல்ல
பூவுலகில் பஞ்சவரிலப் பொடியெனும் பாற்றனவன்
மேவுதலாய்க் கேததிரர்க்கு மேம்பாடு ரைப்பதுவேன்
தாபரிக்க நல்ல சமத்துடைய சேவுகனே
என்றுரைத்து மாயவரும் இருகண்கள் பொறிபறக்க
அதிகோப மாக ஆனதொரு மாயவரும்

சதியாக நாமவரைச் சங்கரித்தோ மானலும்
இந்த உலகிலுள்ள இமையவற்கு மேராதே
அந்தமுள்ள நாரதரை அப்போ தருகழைத்து
முன்வந்த காரியந்தான் முனிதமக்கே தான்தெரியும்
தான்பரித்த சேதி தமக்கே தெரிந்திருக்கும்
அரவுக் கமுற்தம் அளித்தகதை மெய்யாச்சு
பஞ்சவர்க்குச் செய்தநண்ணி பார்மீதில் போட்டுவிட்டேன்
கல்நெஞ்ச னைதொரு கடியகுரு க்ஷேத்திரனை
அஞ்சாமல் வைத்திருந்தால் ஐவரையுங் கொன்றுழக்கி
மிஞ்சுலாய் க்ஷேத்திரனை மிகவறுப்பே னென்றுசொல்லி
பாராயு தத்துடனே படைபொர வேணுமென்று
வாரமுடன் நம்பபடையை வகைவகையாய்க் கூட்டுமென்ருர்.

நாரதர் கூற்று

சொல்லால் பெரியதொரு தோற்றமுள்ள மாமுனியே
வில்லாளர் பாண்டவர்கள் மிகவும் நமக்கெதிரி
தம்முடைய பாலகனைத் தான்துணிந்து கொல்லவென்ருல்
பொன்மைசெறி பாலகற்குப் புகழுண்டோ மாயவரே.
தேவரீர் பஞ்சவரை செயிக்கவென்று தான்துணிந்தால்
காவலாய் ஐவரையுங் காக்கவல்லா ருண்டோதான்

மாயன் மறுமொழி

நாரதனுர் சொல்லியபின் நாரயண ருரைப்பார்
தீரமுள்ள க்ஷேத்திரனை சேத்துவா வென்றுரைத்தார்
சேத்துவாராதிருந்தால் சென்னியதை வெட்டிடுவேன்
மாத்துவகை சொல்லவகை யில்லைகாண் மாமுனியே
மாமுனியே நீர்கேளீர் மகாதேவர் தம்மாணை
நாமவரைக் கொல்வது நம்மாணை நிச்சயங்காண்.

பாண்டவர், குருக்ஷேத்திரன் இவர்களை நாரதர் காணல்

வைப்பறவே சொல்லியபின் மாமுனியுந் தானெழுந்து
செப்பமுள்ள பஞ்சவரைத் தேடியே சொல்லலுற்ருர்
குருக்ஷேத்திரன் தானுங் கோலமுள்ள பஞ்சவரை
இருக்கு மிடந்தேடி இமைப்பளவில் சென்றுபுக்கார்
ஓடி யெழுந்திருந்து உற்றதொரு பஞ்சவர்கள்

நாடிஐவர் மாமுனியை நமஷ்கரித்தா ரம்மானே!
ஆசனத்தின் மேலிருத்தி ஆசாரம் பண்ணிநின்றார்.
பாசமிகக் கொண்டதொரு பாவிகுரு க்ஷேத்திரனை
ஆசனத்தில் மேல்துயிலும் அச்சுதற்குச் செய்தகுற்றம்
நேசமுள்ள தன்மருக்கு நீதியுடன் சொல்லலுற்றார்.
ஓசையுள்ள மாயவனார் உங்கள்மேல் கோபமதாய்
சொன்னது சொல்லத் தொலையாது காணுமக்கு
நன்னெறிசேர் ஈசுபரரும் நான்முகனுங் காராத
கன்னல்புகல் தன்மரேநீர் காக்கும்வகை சொல்லுமென்றார்.

தருமன் கூற்று

செய்யதன்மர் சொல்லுவர் சிறப்புடைய மாமுனியே!
வெய்ய அருச்சுனன்தான் வேட்டைபோய் கானகத்தில்
மீள் வருகையி லெவிச்சாயக் குருக்ஷேத்திரன்
தாளிணையைப் பூண்டுகொண்டு தன்னையவன் காருமென்றான்
குத்தமது கேளாமல் கோதை யருச்சுனனும்
சத்திய வார்த்தையவன் தப்பாமல் தானுரைத்தான்
வந்தகுற்ற மேதென்று வகைவகையாய் கேட்டதற்பின்
1 இந்துலவுந் தாரான் குருக்ஷேத்திர னுரைக்க
மெத்தமனத் தாபமதாய் வேண்டுந் துயரமுற்று
அடைக்கலமாய் வந்தவனை அண்டாமல் தானுரைத்தால்
சடைக்கங்கை தாராதன் மனதுக் கேராதே
தெண்டிரைசூழ் வையகத்தில் செப்புவரோ நம்புகழை
புண்டரிகக் கண்ணீர் பொறுப்ப தவர்பெருமை
குறியாகத் தானுமொரு குற்றமது செய்யலையே
அறியாமல் வந்தகுற்ற மானதொரு மாயவனார்
குற்றமதா யெண்ணியவர்க் கோபமதாய்த் தான்மொழிந்தால்
மற்றொருவர் காக்க வகையேதுங் கூடாது
இற்றையவர் பாராட்டி எங்களையுங் கொல்லுவராம்
சிற்றமுடன் நாமுஞ் சிவலோகஞ் சேருவமே.
பூவுலகில் மானிடற்கும் போற்றரிய தேவருக்கும்
மேவுதலாய்ப் பேச்சுமுண்டே மெய்ஞான மாமுனியே
என்றுதன்மர் சொல்ல ஏற்றமுள்ள மாமுனியும்
கன்றியவர் தன்மர்தனைக் கடுவசனஞ் சொல்லலுற்றார்.

---

1. குந்துலவுந் தாரான் என்றுளது.

நாரதர் கூறிய மொழி

மன்றில் பிழைகாக்க வகைசொல்லக் கேளாய்நீ
என்று குருவுக்கு இரண்டுநினைப் போரும்
மாதா பிதாவுக்கு வஞ்சனைகள் செய்தோரும்
சூதாக ஈசுபரர்க்குத் தோஷமது செய்தோரும்
கோவதையைக் கொன்றதொரு குருவுலிங்க சங்கமதை
பாவினைகள் செய்துவந்த பண்புடைய தன்மர்நீ
நீதமுடன் காப்பர்களோ நின்வினையோ தான்கெடுவீர்
தீதவனை வைத்திருந்தால் செற்றுவா வென்றுரைத்தார்
செற்றுவா ராதிருந்தால் சென்னியை வெட்டிடுவேன்
மாத்து வகைக்குமால் வகையேது மன்னவனே

தருமன் மதில்

என்றுமுனி சொல்ல ஏற்றமுள்ள தன்மர்சொல்வார்
என்று மறியாம லுரைத்தாயே மாமுனியே
வல்வினை தான் செய்தாலும் மனதாறச் செய்யலையே
தஞ்சமென்று வந்தவனைத் தான்செயிக்க வேண்டுமென்றால்
ஆறுகொண்ட செஞ்சடையார் அரனார்க்கு மேராதே
பேர்தானு முண்டோ பேர்பெரிய மாமுனியே
மாயவனார் இக்கருமம் மண்டலத்தோர் மெச்சிடவே
போயவரை என்னவென்றுப் பொறுத்தால் புகழ்பெரிது

நாரதர் புறப்பாடு

சங்கையுள்ள நாரதருந் தானெழுந்து கோபமுடன்
உங்கள் தனக்காக ஓடிவந்தோம் பஞ்சவரே
கோலமுள்ள மாயவனார் கோபமது பார்க்கவென்று
ஆலமுண்ட கண்டர் அரனலுந் தீராது
உங்கள் சமத்தும் உலகளந்தான்தன் சமத்தும்
திங்கள் முகத்தோனே தீர்க்கமாய்ப் பார்த்திருப்போம்
ஆனதொரு நாரதரும் ஐவருக்குத் தானுரைத்து
கானகத்தை விட்டகன்று கண்ணர்பால் சொல்லலுற்றார்.
அயோற்றி நகராளும் ஆய னடிதொழுது
சயோற்றியாய்ச் சொன்னதுவுந் தாமவரைப் பேசினதும்
கன்றியவர் சொன்னதுவுங் கட்டுரைத்தார் மாமுனியும்
நன்றியுள்ள மாயவரே நல்லதொரு பஞ்சவர்க்காய்

புண்டரிகத் தோனே பொறுப்பதுவே தன்பெருமை
அண்ட குருவே அடியே னுரைத்தமொழி
நன்மையோ தின்மையோ நாயே னுரைத்தமொழி
என்ன மனதிலெண்ணி ஏற்குந் திருவுளத்தில்
மண்ணையுண்ட மாலே மனதுக்கு ஏற்றபடி

மாயன் படைத்திரட்ட உத்திரவிடுதல்

மாயன்வெகு கோபமுடன் மாமுனியைத் தான்பார்த்து
துய்யதொரு தேவரல்ல தோற்றமுள்ள ஈசனல்ல
கால எமனல்ல காலபிரமன் தானுமல்ல
இந்திரனு மல்ல இரவிமதி தானுமல்ல
வச்சிரத்தோ னல்ல மாபிரமன் தானுமல்ல
சீலப் பெரும்பிழைதான் செய்தகுரு க்ஷேத்திரனை
ஆன சமத்தறியான் அருச்சுனனே காக்கிறவன்
கானகத்தில் நாமவரை கன்றிவிழக் கொன்றுழக்க
சீலப் பெரும்படையுந் தேர்புரவி காலாளும்
கோல மதக்களிறுங் கோப்புடனே கூட்டுமென்றார்
அன்னேரந் தூத ரங்கங்கே தானோடி
படைமனுஷ ருள்ளோரும் பட்டணத்தி லுள்ளோரும்
அடவுடனே வந்துநின்று ஆய ரடிதொழுதார்
தம்பட்ட மோளந் தாரையுடன் பேரிகையும்
தும்பிட்ட லோகந் துணுக்கெனவே தானதிர

சுபத்திரை முறையிட்டுத் தடுத்தல்

செம்பவள வாயாள் [1] சிமித்திரையாள் தான்கேட்டு
வெம்பி யெழுந்திருந்து மிகவலறி மாயவர்முன்
ஆயரே அச்சுதரே அண்ணரே பஞ்சவர்மேல்
மாயரே எங்களுக்கு வாய்த்ததுணை யென்றிருந்தோம்
திரியோதிரன் பார்க்கில் தேவரீர் பஞ்சவர்மேல்
சரியாக அண்ணுவி தான்படையும் போவர்களோ
வரிக்கோல வில்லெடுத்து மாயவரே போவர்களோ
எந்த னருச்சுனனுர் ஏத்துஞ் சிலையுடையார்
தந்தைக்கு வந்ததுயர் தான்தீர்க்கும் வில்விசையன்
சந்தமுள்ள வில்லாலே சதாசிவனைத் தானடித்தான்

---

1. சுபத்திரை – அருச்சுனன் மனைவிகளிலொருத்தி.

இந்தஉயிர் கொல்ல இணங்குதோ உன்மனந்தான்
கந்தமுள்ள மாலே கடலை அடைத்தோனே
எந்தனுயிர் கொல்ல ஏற்குதோ உன்மனந்தான்
சுந்தரப் பொன்பெருமாள் சோர்ந்துமுகம் வேறுபட்டார்.

சுபத்திரையிடம் மாயன் கூறியது

சங்கையுள்ள மாயவருந் தங்கைமுகம் பார்த்துரைப்பார்
துங்கமுள்ள சேத்திரனை சோர்வு செய்துபோனவனை
மண்டலத்தில் தேவரெல்லாம் வைத்திருக்க மாட்டாமல்
திண்டுமுண்டாய் அருச்சுனன்தான் தீவினைகள் வைப்பதுவென்
நந்தமக்கு வேண்டாதான் நங்கையரே அங்குவந்தால்
அங்கவனை வைத்திருந்து ஆக்கிரமஞ் சொல்வதுதான்
திங்கள் நுதலாளே தேன்மொழியே யார்பொறுப்பார்
அங்கவனை நாம்தா னறிந்துவிட வேணுமென்ருர்.

சுபத்திரை பஞ்சவர்களிடம் கூறியது

என்றுசொல்ல மாயவனுர் ஏங்கி இளங்கொடியும்
சென்றுதான் பஞ்சவர்கள் சேதியைக்கண் டேவருவோம்
தன்மையுள்ள அன்னருட தாளிணையைப் பூண்டுகொண்டாள்
திண்ணமுள்ள பஞ்சவர்பால் சென்று வருமளவும்
நின்றுவிடு மென்று நெடியோன் தனையமத்தி
கண்ணருவிநீர் சொரியக் கானகத்தே செல்வாளாம்
பார்மலை காடுவிட்டு பஞ்சவர்முன் செல்வாளாம்
மண்டலத்தோர் மெச்சு மகிமையுள்ள பஞ்சவரை
கண்டவள்தான் தெண்டநிட்டுக் காரிகையு மேதுரைப்பாள்
கங்குல் திருமாலுங் கடுங்கோபங் கொண்டெழுந்தார்.
திங்கள் முகத்தோனே திருமால் நமைச்செயிக்க
அடர்ந்த படைகூட்டும் ஆதாளி னுன்கேட்டு
கெர்ச்சித்துக் கூட்டமிட்டுக் கெம்பீரமா னுன்கேட்டு
அந்தமொழிகேட்டு அண்ணுவி பக்கல் சென்று
சிந்தைபெரி தெங்களைநீர் செயிக்கவென்று வந்தீரோ
எந்தனுயிர் கொல்ல ஏற்குதோ யென்றுரைத்தேன்
கூறுகின்ற தென்னையவர் கோபமுடன் தான்பார்த்து
நம்மை யடுத்திருந்தும் நாமவரை யேற்றிருந்தும்
தின்மைசெய்து போனவனை தீர்க்கமாய் காக்கவென்று
ஒப்புடைய பஞ்சவர்கள் உறுதியுடன் காப்பரென்று

செப்பமுட னேயவர்கள் சேனைபடை உள்ளதெல்லாம்
கன்றியவர் வந்தவற்குக் கைபோட்டுத் தான்கொடுத்தார்.

தருமன் சுபத்திரையிடம் உரைத்தது

தோகை மயிலழகி! சுபத்திரையே நீகேளாய்!
ஒப்புக் கொடுப்பர்களோ உபாயம் நினைப்பர்களோ
வைப்புடைய மன்னுலகில் வாழ்பவர்க்கு யேராதே
செல்வத்தை யெண்ணி சிலகாலம் நாமிருந்தால்
பாக்கியத்தை யெண்ணி பலகாலம் நாமிருத்தால்
ஆலால முண்ட அரனுர்க்கு மேராதே
மண்ணுலகில் விண்ணுலகம் வாழ்பவர்க்கு மேராதே
கண்ணருட கையில் கணையாலே ஐவரையும்
கொன்றதினு லென்ன குறையேது மாமயிலே!

சுபத்திரை மீண்டும் மாயனிடம் சென்று கூறியது

என்று தன்மர்சொல்ல ஏங்கிஇளங் கொடியும்
திண்ணமுள்ள பஞ்சவரைச் செப்பமுடனே தொழுது
மண்ணையுண்ட மாயவர்பால் மாமயிலாள் தானடைந்தாள்
ஆயரடி தொழுது ஆரணங்கு ஏதுரைப்பாள்
கல்லைப் பெண்ணுக்கிவித்த கண்ணர்பா லேதுரைப்பாள்
அல்லல் பிறவி அறுக்குமந்த மன்னவர்முன்
உம்முடைய சேதியெல்லாம் உரைத்தே னவர்தமக்கு
வெம்மையுடன் பஞ்சவர்கள் வேண்டும் விசாரமிட்டு
போதத் தவிப்பாய் புலம்பியவ ளேடியங்கே
மாதர்க் கரிதான மன்னன் அருச்சுனர்பால்
சென்று விழுந்ததுக்குச் சிவன்பேரி லாணையிட்டு
குன்று புகழ்ந்தொரு குற்றமது கேளாமல்
வார்த்தை யுரைத்தார்காண் வலுவுடைய பஞ்சவர்கள்
போற்றி யுரைத்தவளும் பொறுமையுள்ள அண்ணுவீ
மாற்றிவிடி ரிக்கருமம் மாமயிலா ளீதுரைக்க

மாயன் போர்க்கோலம் பூணுதல்

ஏத்துஞ் சிலைக்கைய ராமருங் கேதுரைப்பார்
இந்தக் கிருப மினித்தெரியுந் தங்கையரே
அந்தக் கிருபம் அறிந்துவிடப் போறமினி
சிந்தைக் கலங்காமல் தேன்மொழியே மாளிகைபோ

கந்தமலர்க் கண்ணர் கடுங்கோபங் கொண்டேதான்
அன்றுவட வாக்கினிபோ லாவித் தெழுந்திருந்து
மானவ யோத்திநகர் மண்டலத்தி லுள்ளோரும்
ஆனைக் குதிரைகளும் அறுபதுலெட் சந்தேரும்
சேனைப் படைத்தலைவர் செய்யதொரு காலாளும்
எண்ணவொண்ணு சேனை எண்பதுலெட் சங்குதிரை
கண்ணர் வரவழைத்துக் காரிடிபோ லேமுழங்கி
மன்னர் படைந்தலைவர் மகாசேனை அத்தனையும்
பன்னு [1]தமி ழுக்குரிய பலவாயு தமெடுத்தார்
பட்டு வகையும் பலவாயு தமெடுத்தார்
இட்ட முடனே இதமான பச்சைவடம்
கச்சையுடன் சீராவுங் கட்டாரி தான்முதலாய்
பச்சை நிறத்தான பலவாயு தமெடுத்தார்
ஏற்றினர் வில்லும் இராமபா ணமெடுத்தார்
காற்றிரச்சல் போலே கடுங்கணையுந் தானெடுத்தார்.
கோட்டுக் கணையுங் கொடுங்கணையுந் தானெடுத்தார்.
தீட்டியதோர் சக்கரமுந் தெரிந்துகணை தானெடுத்தார்.
தோள்பிரள அம்புஞ் சுடுகணையுந் தானெடுத்தார்.
காளமுகில் போலே கருமேக வில்லெடுத்தார்.
வைரக் கணையும் காமேக வெண்கணையும்
ஐராபதக் கணையும் அமரர்கோன் தன்கணையும்
எட்டுவா யம்பும் எரிவருணன் தன்கணையும்
மட்டூர கக்கணையு மரனைவென்ருன் தன்கணையும்
தீட்டியதோர் நற்கணையுந் தெரிந்துகையில் தானெடுத்தார்.
நூருயி ரங்கோடி நுனிவைர வெண்குடையும்
ஆருயிரங் கரியும் அறுபதுலெட் சந்தேரும்
இருநூறு வெள்ளை ஐராபதத் தார்படையும்
பேரிகை எக்காளம் பெரியதோ ருடம்மாணம்
வாரி யதிர மகாமேரு தானதிர
பார்முடி சேடன் பதியுங் கிடுகிடென
சென்ருர் பெருமான் திடுக்கிடவே லோகமெங்கும்

---

1. தமிளக்குரிய என்றுளது.

திரியோதரன் பஞ்சவர்களுக்கு உதவுதல்

அன்றுதிரி யோதிரனும் அந்தவிசே டங்கேட்டு
பதினெட் [1] டக்குரேணி படைமனிதர் தன்னுடனே
அதி பிரிசமாக அவனு மனமகிழ்ந்து
பச்சைவண்ணன் தன்துணையாய்ப் பஞ்சவர்கள் தானிருந்தார்
இச்சையுடன் வந்தவினை யான்செய்த புண்ணியங்காண்
என்று புறப்பட்டார் ஏற்றமுள்ள தன்படையும்
குன்றிசெறி பஞ்சவரைக் கோப்புடனே வந்துகண்டான்.
நாம்வந்த காரியந்தான் நம்மில்வினை வந்ததென்றால்
ஒருவற் கொருவர் உதவிதவஞ் செய்யாமல்
செருவில்வினை வந்ததென்றால் செல்லாதி ருப்பார்களோ
படைக்குத் துணையாக வந்தோம் பஞ்சவரே
நடைக்குப் பெரியதொரு நாராயணன் பகைத்தால்
விடைக்கும் மனிதர்களோ வெல்வமென்று சொல்லுவது
சடைக்கெங்கை தானணிந்தார் தானவனார் தாமொழிய
ஓரடியா லிந்த உலகளந்த மாயவனை
பாரரச ராலே படைபொருத மாட்டுவரோ
எங்கள்மேல் வந்தாலும் யாங்களெல்லா மாண்டாலும்
செங்கண்மால் சீர்பாதஞ் சேருவமே அண்ணாவீ
என்றுரைக்கப் பஞ்சவர்க ளேற்றுந் திரியோதிரனும்
நின்றுரைக்கு மவ்வளவில் நெடியோன் படையுளதும்
ஆவித்துக் கொக்கரித்து ஆயன்படை மூடியதே
அப்போ பெரும்படையும் ஆவர்படை யேதெனவே
மாயன் விளம்ப வலுக்கோபங் கொண்டேதான்
தாயகமாய் வந்தவனைத் தான்பார்த்து மாயவரும்
இன்று தெரியுமடா யிடும்புதிரி யோதனனே

திரியோதரன் படையை மாயன் வெல்லுதல்

நின்ற படைமேலே நெடியோன் படையுளதும்
சென்று மிதித்தார் திரியோதிரன் படைமேல்
அன்று திரியோதிரனும் அறவே துயரமுற்று
மெத்த மயங்கி வெடுவெடெனத் தான்மயங்கி
கோத்துக் குலைந்து கோடேறிப் போகலுற்றான்.

---

1. அக்குரோணி— 21,870 யானையும், 65,610 குதிரையும், 21,870 தேரும் 1,09,350 பேர்கொண்ட ஒரு சேனைத்தொகை.

இன்று பிழைத்தமென்று யெல்லோருந் தானேங்கி
*மூன்று பிலத்தொடான் முறிந்தோடிப் போகலுற்றான்.

பஞ்சவர் போர்க்கோலம்

கானகமும் வானகமுங் கண்ணும் பொறிபறக்க
ஆனதொரு மாயவரும் ஐவர்மேல் செல்லலுற்றார்.
கண்டவர்தான் பஞ்சவர்கள் கண்ணர் பெரும்படையை
புண்டரிகக் கண்ணர் பொற்பாதம் நான்மறவேன்
ஆயுதங்கள் தானெடுத்து அருச்சுன னுமன்னேரம்
தாயே சரசுபதியே சங்கரியே தஞ்சமென்று
குண்டலங்கள் தானணிந்து கோலவரி வில்லெடுத்து
தெண்டாயுத வீமன் செங்கையிலே வில்லெடுத்து
வண்ணப் பரிநகுலன் வாளெடுத்து வில்லெடுத்து
சங்கைச் சகாதேவன் சரமாரி தானெடுத்து
சொன்னவண்ணஞ் செய்த சுநதி தனை நினைந்து
பங்கமுள்ள சோதி பகவான் தனை நினைந்து
வண்மையுள்ள தன்மர் மகாமேக வில்லெடுத்து
செம்மை யுடனே சிவனார் துணையெனவே
கவசமுறப் போட்டு கார்வண்ணன் தேரேறி
சிவபூசை யெல்லாஞ் செய்துமிக வேமுடித்து
நன்றியுள்ள பார்த்தன் நாகபா சக்கணையும்
பன்றிவேச மெடுத்துப் பரமர்தந்த பாசுபதம்
ஐயிரா பதக்கணையும் அமரர்கோன் றன்கணையும்
பயிரவித் தேரேறி பார்த்தன் கவசமிட்டார்
நின்றார்கள் பஞ்சவர்கள் நெடுமால் தமக்கெதிரே
அஞ்சு ரதமும் அஞ்சுமலை போலே
அத்த கிரிகளஞ்சும் அசைந்து வருவதுபோல்
மத்தகே சங்களஞ்சும் மதம்பொழிந்து நின்றாப்போல்
பஞ்சவர்கள் நின்ற பளபளப்பை யென்சொல்வேன்

வானுலகக் கூற்று

ஆகாச வீதியிலே அந்தரத்தே தேவர்கள்
ஆதி சிவனாரும் அமரிகளைத் தான்பார்த்து
ஆயன் தளந்தனையும் அழகுதன்மர் ஐவரையும்
தாயகமாய் நின்ற தைரியத்தைப் பாருமென்றார்.

* = ?

பெருமா ளுடக்கிறுபம் பின்பறியப் போறேமென்ருர்
இந்தத் தளமுழக்கம் இனியறியப் போறேமென்ருர்
தனஞ் செயனுர் கையினுலே தாமோத ரன்ருனும்
படுந்துயர் மெத்தப் பார்க்கவினிப் போறேமென்ருர்

மாயன் போர்க்கோலம்

வண்டுறையும் பூந்துளப மாலையணி மாயவனுர்
நின்றே நாலுதிசை நெடியோனுந் தான்பார்த்து
வந்து வளைத்தார் மகாமேரு தானடுங்க
செந்தூள் பறக்கச் செங்கதிரோன் தான்மறைய
வந்தார் வட திசையில் வண்மையுள்ள ஆள்வாரும்
தென்திசையி லாடகத்தான் சென்று வளைந்தனராம்
கீழ்த்திசையில் வந்தார் கிருஷ்ண மாயருந்தான்
மேல்திசையில் வந்தார் விடையான் மாயவரும்
நாலு வகையாலும் நாராயணன் பவுசு
எண்ண வொண்ணுச் சேனை யென்பதுலெட் சம்மனுஷர்
மண்ணுவிண்ணுந் தானதிர மாயன் வளைத்தார்காண்

பஞ்சவர்கள் புறப்பாடு

திரௌபதை யாள் தன்னிடத்தில் சேர்த்துக் குருக்ஷேத்திரனை
பத்திரமாய் வைத்திரென்று பார்த்தனவன் தான்கொடுத்து
கேட்டீர் திரௌபதியே கெட்டியென்று தானுரைத்து
மாட்டிடையன் பொல்லா மடிப்புகளைச் செய்வனென்றும்
காட்டிக் கொடுத்துக் கணைகள் மிகவெடுத்து
மாடேறு ஈசுரரே மகாதேவர் தஞ்சமென்ருர்.
கந்தன் தனையீன்ற காலைகண்டார் தஞ்சமென்று
எந்தன் தனைப்படைத்த ஈசர்பதத் தஞ்சமென்று
வந்து வளைந்துகொண்டான் மாயன் படைநடுங்க
இந்தக் கிறுபமெல்லாம் இனித்தெரியும் மாயவரே
சொந்த மிவனலவோ சொற்பமென்று யெண்ணிவிட்டீர்
எண்ணின எண்ணமெல்லாம் ஏழைமதி யாகுமென்ருர்
சிந்துரதத் தேரேறிச் செங்கையிலே வில்லெடுத்தார்.
அந்தமுள்ள தன்மர்அதட்டி ரதம் விடுத்தார்
தன்மர் நடக்கத் தனஞ்செயனு மேதுசொல்வான்
வன்மந் தொடுத்ததொரு மாயவனுர் தன்படைமேல்
அண்ணுவி நீதான் அரியதொரு தேரேறி
தண்ணர் மேல்செல்லக் காரணமோ யென்றுரைத்தார்,

சிவமயம்

முன்னுரை

"உலகெ லாமுணர்ந் தோதற் கரியவ
னிலவு லாவிய நீர்மலி வேணிய
னலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்."

என்று சேக்கிழார் பெருமானால் வாழ்த்தி வணங்கப்பெற்ற எல்லாம் வல்ல எம்பெருமான் தில்லையிலே ஆடவல்லானாக ஆட, அவனது ஆட்டத்திலே நாட்டங்கொண்டிருப்பவள் சிவகாமசுந்தரியாம் உலகீன்ற அன்னை. 'சக்தி யில்லையேல் சிவமில்லை' எனக் கூறுவர் ஆன்றோர். எனவே உலகுக்கு மூலகாரணம் சக்தி ஆனதால் பலரும் சக்தியை வழிபட்டனர். அவ்வாறு வழிபட்டோருள் இச்சிவகாமி அம்மன்பேரில் அகவலை எழுதிய ஆசிரியரும் ஒருவராவர். ஆசிரியர் பெயர் தெரியவில்லை. பிழைகள் மலிந்துகிடப்பினும் இறைவிமீது எழுந்த பக்திமேலீட்டால் பாடப்பெற்றதால் சந்தம் அழகாக அமைந்துளது. பிழைகள் ஓரளவு திருத்தம்பெற்றுள்ளன.

இச் 'சிவகாமி அம்மை அகவல்' என்ற பெயரில் எமது மகாலில் சுவடி எண் 394-B/D-912; 395/D. 913 ஆகிய இரண்டு சுவடிகளும் சுவடி எண் 365-B/D. 905-ன் படியாகிய எண் 289 உள்ள காப்பீடு நூலும் உள்ளன. இவற்றுள் சுவடி எண் 395-ம், காப்பீடு எண் 289-ம் ஒன்றே. சுவடி எண் 394-ன் பிற்பகுதி சற்று வேறுபாடு உள்ளது. இவற்றுள் காப்பீடு நூல் 289 சரிசெய்யப்பெற்று மற்றவற்றின் துணையுடன் அச்சேறியுள்ளது.

இதன்கண் காணப்பெறும் குற்றங்குறைகளைப் பெரியோர்கள் பொறுத்தருளவேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, இந்நூல் இனிது நிறைவெய்த, இறைவி சிவகாமி அருள்பாலித்தமைக்கு நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

தஞ்சாவூர்,
18—9—74.

இப்படிக்கு,
வித்துவான் இரா. திலகம்,
தமிழ்ப் பண்டிதர், சரசுவதி மகால் நூலகம்.

சிவகாமி அம்மைபேரில் அகவல்

பூவினில் வாழும் பொன்னே மின்னே
மூவர்கள் முதல்வி தேவர்கள் தலைவி
சதுமறை இறைவி தனையறி யறிவி
பசுபதி இறைவி பாசமை யுறைவி
திரிபுர தகனி தினகர நயனி
மரகத வடிவி வரைதனி லுறைவி
முருகவிழ் குழவி முருகனை யருளி
அரகர வசனி அரியொடு துணைவி
கரதல கமலி கருணையில் நிமலி
பரதவ விமலி யளியணி யமலி
அருள்நெறி விளைவே அறம்வள ரனையே
கரிமுக னனையே கருதுவர் துணையே
தேனே ருசியே சிவமே தவமே
ஊனே உயிரே உருவே அருவே
வானே நிலமே மலரே மணமே
மானே மயிலே கடலே (ய)முதே
பண்ணே யிசையே பகலே யிரவே
(வி)ண்ணோர் மணியே கனிவோர் மனமே
விண்ணே தொனியே மேலோ ரமுதமே
கண்ணார் சிவனார் கனிநா யகியே
ஒளியே வெளியே உமையெம் மையே
தெளிவே கருவின் செயலா னவளே
வெளியே பயிரே விரையே முளையே
அளியே புனலோ ரைந்தா னவளே
காலே அனலே கதிரே மதியே
பாலே அதனால் பயனா னவளே
முத்தே நிரையே மு(மு)மா மதியே
சித்தே எவர்க்குந் தெரியா தவளே
சொல்லே பொருளே துரியா தீதத்
தெல்லா வடிவுக் கியலா னவளே

வெவ்வே அவ்வே நடுவா னவளே
ஒன்று யிரண்டாய் ஒருமூன் றெனவே
நின்றுய் பலவாய் நிறைகின் றவளே
உச்சி விளக்கங் கொள்வோர் தனிலே
அச்ச மறக்கூத் தாடு மணங்கே
சத்தி சித்தி சற்க ரத்தி
முத்தி பத்தி முற்கா ரத்தி
அறுத்தி நிறுத்தி அறுகா ரத்தி
கத்தி வித்தி கயப்பா ணிச்சி
நித்த விநோதி நிற்கு மனுதி
சுத்த (மா)மலர் துதிக்கு மலாதி
வாசல் மேனி வாகு மேனி
சூலி கபாலி சூர்தடி சூலி
பூதமொ டாளி பூதமெஞ் ஞானி
பூத காளி பூதொரு காளி
சீறிய திரிபுரம் நீறெ ழு(ச்)சிவன்
மேருவை ஒருகையில் விற்கொண் டவளே
நீயர ணைப்பெற அரனு ணைப்பெற
மாயம் நினைந்து மகிழ்கின் றவளே
உன்தா யென்பவர் தந்தாய் நீயே
வந்தா யன்(பே) காக்கும் மரனே
யோகத் திருவே உண்மைச் சிவனுர்
பாகத் துறையும் பரம விளக்கே
கன்னி குமரிக் கருமா தவனுர்
பின்னி முன்னி பேரின் பத்தி
கலைசேர் பாணி கெவுரி பாணி
சிலைவா ணுதலி சிற்றின் பத்தி
திருவே சிவமே சிவசங் கரியே
கருவே கடல்சூழ் கடலா னவளே
காமக் கலைச்சி காம வலைச்சி
காம விழிச்சி காம மொழிச்சி
ஓம வலைச்சி ஏம முலைச்சி
ஏம பதத்தி வாம (ப)தத்தி
அன்ன நடைச்சி மின்னுமி(டை)டச்சி
கன்னல் மொழிச்சி சொன்ன மறத்தி
வனச முகத்தி வனச விழிச்சி

வனச கரத்தி வனச பதத்தி
முத்திக் குறவி முத்தித் தலைவி
முத்தித் துணைவி முத்திக் கடலே.
ஞான விழிச்சி ஞான மொழிச்சி
ஞான வசத்தி ஞான விளக்கே
எண்ணெண் கலையு மிடையிங் கலையும்
யென்றுஞ் சிவ(மு) மாகிய பெண்ணே
நீயர னுள்ளும் அரனுன் னுள்ளும்
கோவில் இருந்து குடிகொண் டவளே
நித்த நினைப்பவர் சுத்தம றுத்தே
உத்தம ப(த)த்தினில் [1]வைக்கு மணங்கே
ஈரே மூலகை யீன்றவ ளாயினு
மாரா தெங்கு மருந்தா முலையே
பொன்னே மணியே புதுமா மலரே
அன்னே அருள்சேர் அகிலாண் டவளே
கம்பை நதிக்குள் [2]கம்பரை நாட்டி
தம்பன மெனமெய்த் தவமுத் தவளே
ஞான மெனுந்தலம் நிறையும் நிறைகலம்
கோல மெனும்பூங் கோதை யணங்கே
சொன்ன நதிகளுஞ் சொக்கற் கினிதா
யன்னம் பகிரு மங்கயற் கண்ணி
வேராய் முதலாய் வீதி விடங்கர்தம்
ஆரு ருறையும் அல்லியங் கோதாய்
ஓங்கா ரத்தினி லுற்றிருப் பவளே
றீங்கா ரத்தினி லெளிதிருப் பவளே
அண்டமு மண்ட பகிரண் டத்தினு
முண்டென நிற்கு மொன்ரு னவளே
அரிபிர மாதியள் அடியவர் மாதவர்
பரவிய ஞானம் படருங் கொம்பே
தேவர் தமக்குந் திகழ்முனி வரற்கும்
மூவர் தமக்கு முதலா னவளே
தத்துவந் தொண்ணூற் றுரு தனிலே
மெத்திய ஆரு தார மிக்க
மண்டல மூன்றும் வாயுவொரு பத்தும்
அண்(டிய நா)டிக ளவையொரு பத்தும்

1. நீங்கு என்றுளது. 2. = ?

முந்திய வுந்தியில் மூலாக் கினியு
மந்தமில் லாத அவத்தைகள் பத்தும்
காய மகன்று கழன்றிடு சீவன்
போய(ங்) (கொ)டுங்கிப் புகலிட [1] மான
மெஞ்ஞா னத்தை மிகவே விளைத்து
அஞ்ஞா னத்தை அறுக்கு மணங்கே
முக்கோ ணத்தி மூலமந் திரத்தி
அக்கோ டரவு மாபர ணத்தி
ஞாலந் தன்னிலும் நல்லடி யார்தம்
காலன் வினையைக் காய்ந்த கரத்தி
புண்ணியர் முன்னே போய்நிற் பவளே
திண்ணியர் கண்ணில் தெரியா தவளே
தாயென் பவளே சரணமென் பவர்தம்
மாயப் பிறவியை மாற்று மருந்தே
கல்லார் நெஞ்சிற் கல்லா னவளே
சொல்லார் கண்ணிற் தோன்ரு தவளே
தெளியார் நெஞ்சிற் தெளியா தவளே.
நினைந்தவர் நெஞ்சில் நி(றை)ந்திருப் பவளே
சூடக(க்) கச்சி துடியிடைத் துச்சி
பாடகப் பதத்தி பஞ்சாட் சரத்தி
அணுவே யணுவி லகண்டமா னவளே
துணையே ஞான(த்) துச்சியிற் சுடரே
கன்மக் கடைகரை காணு தவளே
தன்மக் கடைகரை தான்கண் டவளே
மையிறு குழலாள் வண்டோ தரிதன்
கையில்க் குழந்தையைக் கைக்கொண் டவளே
சம்பந் தன்றனைக் கண்ட தயாவுடன்
கும்ப முலையால் குதிகொண் டவளே.
புண்ணிய நினைவு பொருந்திய அன்பரை
எண்ணி யிருந்தீ டேற்று மணங்கே
கிளியே அனமே கிளர்கோ கிலமே
வெளியே வீடாய் வீற்றிருப் பவளே.
அவருடன் மூவர் அருந்தமிழ் பாடச்
சிவபத மீந்தே சிந்தைகொண் டவளே
சித்தனந் தாதியிற் சித்திவைப் பவளே

1. மானே என்றுளது.

பத்தர்தம் மீ(தி)னில் பத்திவைப் பவளே
கத்தர் கொடுத்த கருணைத் தவசுநின்
றத்தனுர் பிரசாதம் பெற்ற அணங்கே
(வாகாஞ்) சிவனுட வானவ ரறியா
ஏகாந் தத்தி லிருக்கு மணங்கே
சங்கர னுடனே தற்பர வெளியில்
அங்கிருந் தேவிளை யாடும ணங்கே
எண்ணே எழுத்தே எல்லா வுயிர்க்குங்
கண்ணே கிருபைக் கடலா னவளே
விடைதனி லேறும் விமலர்தன் னெழிலால்
படர்சடை கெங்கா பரமேசு பரியே
மாகதந் தமரர் மறைபுக் கானுர்
ஆகத் திருந்துடன் ஆலமுண் டவளே
சங்கரர் மேனி தனில்தழும் பாக
கொங்கை யதனுற் குறியிட் டவளே
தலம்புக ழான தன்னுடன் சத்தி
ஆலங் காட்டி லாடிய மானே
எரிவிழி யாலே எரியுண் டவற்கு
உருவிலி யாக உயிர்கொடுத் தவளே
ஆழியு மவனியு மண்டமு மொன்ருய்
ஊழியி லெவற்கு மொடுக்கமா னவளே
சரிகையுங் கிரிகையும் யோகமும் ஞானமுங்
கருதி இருக்கும் காரண சத்தி
உன்னை நினைந்து ஒருப்படு வார்தம்
நினைவிலுங் கனவிலும் நிற்கும் நிமலி
வேறு படுத்தி மெய்பொய் யாக்கு
மாறுகோ ணத்தி லணுகா தவளே
கத்தமோ டைந்துந் தானே யாகவும்
புத்தியி லிருந்து பூசைகொள் பவளே
உணர்வே யுணர்வா யுட்கொள் பவளே
கனவே யெவற்குங் காட்சியா னவளே
அறிவே அறிவா னந்த மாக்கிக்
குறியே யென்னுட் கோயில்கொண் டவளே
நீணில மதனுள் நின்னடி யார்தம்
ஆணவ மாய்கை அறுக்கு மணங்கே
ஐந்து மடக்கி அறிவற் றவர்தம்

சிந்தை மகிழ்ந்து தெளிவித் தவளே
நீடுகோ புரமும் நிறைந்தமே டைகளு
மாடமா ளிகையு மண்டபச் சிறப்பும்
இலங்கிய வானோர் யாகசா லைகளும்
தலமிக மகிழுஞ் சதுமறைக் குழாமும்
முழுபதந் தருமென மூவே மூலகையு
மழைப்பன போல ஆடிய கொடியு
மணியணி வீதியு மாண்டகோ ணங்(களும்)
மணமலி குழலாள் மங்கலத் தொனியு
மூவர்செந் தமிழின் முழக்கமுந் துறந்த
கோவைத் தொனியுங் குவலைய முனிவோர்
வீடுபெற் றிடமும் வியனதிக் குளமும்
தோடவிழ் செண்பகச் சோலையி னழகுந்
தொல்லைமா முனிவோர் துலங்குமண் டபமும்
தில்லைமூ வாயிரவர் திகழ்(ந்)திரு வீதியுங்
காவிரி (ந)தியுங் கரியமாக் கடலும்
பூவிரித் தடமும் போதவே புடைசூழ்
உம்பர்வாழ் பதியும் ஒப்புரைக் கொ(ண்ணுச்)
செம்பொனு லம(ர்)ந்த தில்லையம் பலத்துள்
அரவுடன் புலியு ம(ணை)வருங் காணத்
திரு(வுடன்) நட(னஞ்) செய்து செப்பிய
செகமது சூழத் திசையது சூழக்
கரைகடல் சூழக் குழையது நெகிழப்
பரமது சூழப் பவுரிகள் சூழ
சுருதி முழங்கச் (சோதிகள்) முழங்கப்
பரத முழங்கப் பரவை முழங்கக்
கீத முழங்கக் கேழ்வி முழங்கப்
போத முழங்கப் புகழ்தல முழங்கத்
தாள முழங்க சவுத முழங்க
கின்னர கின்புரு டாதிகள் பாட
பன்னர வித்தியா தரர்கள் பாட
புலியூ ரவுணர்கள் பூரையென நீலியு
முயலக னுடல நெறுநெறு நெறென
அரியொடு பிரமர்கள் அரகர கரவென
திறமுட னிறையவர் செயசெய செயவென
தவமுனி மறையவர் தம்மிற் சரணென

அவனியி லெவரு மருள்செய் செய்(யென)
நன்மை விளங்க ஞானம் விளங்க
தானம் விளங்க தன்மம் விளங்க
ஞானிகள் கண்டிட நான்மறை கண்டிட
வானவர் கண்டிட வள்ளுவர் கண்டிட
ஆனந்தத் தாண்டவ மாடி யரனார்
தேனுந்து பாகஞ் சிறந்தநா யகியே
தில்லைநா யகியே செல்வநா யகியே
நல்லநா யகியே ஞானநா யகியே
சிற்றம் பலத்தில்ச் சிறந்தநா யகியே
மற்றுஞ் சமைய மகிழ்ந்தநா யகியே
பொன்னம் பலத்தில் போற்றும்நா யகியே
அன்ன மகிழ்ந்து அளிக்குநா யகியே
ஈரே முலகையு மீன்றநா யகியே
தாயே சிவகா மசவுந் தரியே
சத்தியும் நீயே தன்மமும் நீயே
முத்தியும் நீயே மோட்சமும் நீயே
புத்தியு நீயே போதமும் நீயே
[1]கோதமும் நீயே நாதமு நீயே
தத்துவம் நீயே சாட்சியும் நீயே
வித்தையு நீயே மெய்த்தவம் நீயே
அத்தமு நீயே அட்சர நீயே
மந்திர நீயே மாய்கையு நீயே
அந்தர நீயே தந்திர நீயே
இமையே உமையே எண்ணு னவர்தம்
தவமே சிவகா மசவுந் தரியே
நின்னை அறிந்தும் நின்னையு ணர்ந்தும்
நின்னை நினைந்தும் நின்பத மேதவம்
அய்யோ அம்மே அறிகின் றிலர்காண்
மெய்யோ என்னை விலக்கிறை கின்ருய்
என்மன மென்குணம் யான்சொல்ல வேணுமோ
நின்மக னின்குணம் நீஅறி கிலையோ
மக்கள் குணந்தனை மாதா வன்றியில்
மிக்கவ ரறிவரோ மேதினி தனிலே
எத்தனை பிள்ளைகள் ஈன்றனை யதனுல்

1. சரதமும் போலும்.

புத்தியில் லாதவன் போதமில் லாதவன்
ஞானமில் லாதவன் நன்மையில் லாதவன்
வண்மையில் லாதவன் மதுரமில் லாதவன்
சோபமில் லாதவன் சுகமில் லாதவன்
அறிவுமில் லாதவன் அந்தமில் லாதவன்
உறுதியில் லாதவன் உண்மையில் லாதவன்
கொலைதனக் கஞ்சாக் கொடும்பழி யாளன்
அலைகடல் போலே அலையுங் கருத்தினன்
பிறப்பதற் கஞ்சாப் பெரும்பழி யாளன்
மறப்பது தனக்கோர் மருந்தறி யாதவன்
தவமது முயலத் தானறி யாதவன்
சிவகதை கேளாத் திண்ணிய செவியன்
வந்தவற் கீய மனம்பொருந் தாதவன்
சந்தத மோதச் சலியாக் கருத்தினன்
ஆலைய மென்பது அணுகா வுடலி(ன)ன்
காலனை வெல்லக் கணக்கறி யாதவன்
நின்னடி யார்தம் நிலைமைபெ(ா)ன் ருதவன்
அன்னமுஞ் சொன்னமு மாசைய ருதவன்
புட்பாற் சனைசெய்து போற்றறி யாதவன்
நட்பாய் வறிஞரை நன்றறி யாதவன்
உதிரத் தியல்தனில் உழன்றே திரிபவன்
சதிராய்ப் பஞ்சாட் சரநினை யாதவன்
பொய்யும் பு(ழுகு)ம் புக(ன்றி)டுத் திண்மையன்
மெய்யும் புகழு மிக(ழ்)ந்திடு குரம்பையன்
மெய்யெனப் பவுசை மேலா யிருப்பவன்
தீராப் பிறவிச் செயல்தனை அறிந்து
நீரிற் குமிழி யெனநினை யாதவன்
தொல்(லை)ச் சிவனார் துலங்க நடித்தருள்
தில்லைச் சிவகா மசவுந் தரியே
அன்னே பிறவிக் கலுத்தேன் சலித்தேன்
என்னையே ரட்சித் தருள்வா யம்மே
ஆக்கும் புழுவை ஆக்கிலு மதுதான்
தாக்கு மணிவிளக் கென்பது தான் (பொய்)யோ
ஆகா தவர்தமை ஆக்குவ துனக்குப்
போகாப் பொறிகாண் உண்மைக் கடலே
பெற்றவர்க் கல்லது பிள்ளை வருத்தம்

மற்றவ ரறிய வழக்கது உண்டோ
கண்ணினைத் தான்றி காப்பது வேகடன்
அண்ணியிற் காப்பது எவற்கும் பரமோ
ஈன்ற தாயு மெடுத்த (நாள்முதல்)
உண்ட சுகந்தனை யுன்மன தறியும்
வேண்டா மம்மே விண்ணப் பத்துரை
பூண்டா லறிந்து போடவும் வேணும்
திருநடஞ் சிதம்பரஞ் சிவந்த திருத்தாள்
வாடிச் சிவந்த மலர்க்கர மானே
நிலவணி வேணியன் நித்த முகந்திடும்
உன்தலை மகளுஞ் சிவகாம சவுந்தரியே
உம்பர்க ளறியா வுன்றன் மலர்த்தாள்
நம்பி யிருக்கும் நாயடியேன் காண
துவலோ துவலோ சொன்னேன் சொன்னேன்
(கவராம லென்றன் கவலையை யொழித்து)
காத்தது காத்தாய் கடைபோ கக்கண்
பாத்தெனக் கருளிப் பரிபுரத் தாளே
மாத்தெனக் குனருள் பாலிப்பது பரமே.

சிவகாமி அம்மைபேரில் அகவல்

முற்றும்.

छमति झमति घसति चषति भक्षति तर्णोति चाऽभ्यवहरति च ।
एवं वृणोति पश्चाऽऽरमने च चर्वति च चल्लते (वल्भते)रेति (वेति) ॥ २३ ॥

उपयुङ्क्ते (उपभुङ्क्ते) भुङ्क्ते प्रत्यवस्यति च जक्षति (जक्षिति) इत्यमी भुक्तौ ।
सरवायां विष्वणतीत्यवष्वणत्य[27]थ गिरत्यमी गीर्णौ] ॥ २४ ॥

गिलति ग्रसते चैवं ग्लसतेऽ[28]थ विगर्हिते* ।
[29]दंशे दन्दश्यते दन्दशीति दन्दष्टि खर्दति ॥ २५ ॥

चत्वारि, [30]शुद्धे दंशे दन्दशते दशति द्वयम् ।
[31]वान्तौ स्नुह्यत्युद्गिरति वमत्युद्गिलतीरिताः ॥ २६ ॥

[32]थूत्कारे निष्ठीव्यति (ष्ठी)ष्ठीव्यति निष्ठीवति त्रयम् ।
[33]शेषत्येवं शेपयति शेषे परिशिनष्टि च ॥ २७ ॥

[34]तृप्तौ (मा)मोदयते प्रायत्येते तृप्यति तृम्फति ।
[35]विश्रान्तौ विश्राम्यति द्वे केचिद्विश्रमते जगुः ॥ २८ ॥

